தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

கிழமை இதழ்

தொகுதி 1 | தி. பி. 2014 கும்பம் 29 (13 - 3 - 1983) விலை 65 காசு — இதழ் எண்: 14 | பகுதி 18-19

★ தீவிரப் பொதுவுடைமையாளர் (மார்க்கிச-இலெனினிசம்) வள்ளுவன் மீண்டும் சிறை சென்றார்!

★ 11 மாதம் உறுதி விடுமுறை (பரோல்) முடிந்தது.

மீமிசை உயர்மன்றத்தில் வழக்கு நடந்துகொண்டிருக்கிறது!

★ வன்முறையாளர்கள் என்ற பெயரில் தீவிரப் பொதுவுடைமையாளர்கள் தமிழ்நாட்டுச் சிறைகளில் இன்னும் அடைக்கப்பட்டிருக்கும் கொடுமை!

★ தமிழ்நாட்டு அரசு அவர்களைப் பற்றி அருள் நோக்குடன் நடந்து கொள்ள வேண்டும்!

சென்னை : 7—.

தமிழ் நாட்டில் தீவிரப் பொதுவுடைமையாளர் (மார்க்சிச - இலெனிசம்) பலர், வன்முறையாளர்கள் (நக்சலைட்டுகள்) என்னும் பெயரில், தொடர்ந்து பல ஆண்டுகளாகச் சிறைகளில் வாடுகிறார்கள். அவர்கள் விடுதலையில், தமிழக அரசு அருள் நோக்குடன் கவனம் செலுத்த வேண்டும்.

தீவிரப் பொதுவுடைமையாளர் புலவர் திரு. **கலியபெருமாள்** (தென்னார்க்காடு மாவட்டம் பெண்ணாகடத்தைச் சேர்ந்தவர். அகவை 61) அவர்களும் அவர் குடும்பத்தைச் சேர்ந்தவர்களும், கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக நோய்வாய்ப்பட்ட நிலையிலும் விடுவிக்கப் பெறாமல், சிறையில் வாடிக் கொண்டிருக்கிறார்கள். புலவர் திரு. கலியபெருமாள் அவர்களின் மகன் **வள்ளுவன்** என்னும் இளைஞர் கடந்த 11 மாதங்களாக, மருத்துவ அடிப்படையில் உறுதி விடுப்பில் (பரோல்) இருந்தவர், மீண்டும் இன்று சிறைக்கு அனுப்பப்பட்டார். அவர் ஏற்கனவே 12 ஆண்டுகள் சிறையில் பல கொடுமைகளுக்கும் ஆளானவர். மீமிசை உயர் மன்றத்தில் அவர் விடுவிப்பு வேண்டி வழக்கு நடந்து கொண்டிருக்கின்றது. அவர் மருத்துவ அடிப்படையில் உறுதி விடுப்பில் வெளியே விடப்பட்டிருந்தார். கடந்த 11 மாதங்களில் எட்டுமுறை அவருக்கு உறுதி விடுப்பு நீட்டிக்கப்பட்டிருந்தது. இன்று இறுதி விடுப்பு முடிந்து மீண்டும் சிறைக்குப் போனார்.

—வள்ளுவன—

புலவர் திரு. கலியபெருமாளும் அவர் குடும்பத்தினரும் 1970 ஆம் ஆண்டு நடந்த பெண்ணாகடம் வெடிகுண்டு வழக்கிலும், அதைத் தொடர்ந்து நடந்த ஐயம் பெருமாள் கொலை வழக்கிலும், அரசியல் பகை காரணமாக, அன்றைய கலைஞர் ஆட்சியில், குற்றஞ்சாட்டப்பட்டுச் சிறைப் படுத்தப்பட்டார்கள். அவர் குடும்பத்தைச் சேர்ந்த ஐவரும், உறவினர் இருவரும் ஆக ஏழு பேரும் சிறையில் அடைக்கப்பட்டார்கள். புலவர். திரு. கலியபெருமாள் (இப்பொழுது அகவை 61) அவர் மனைவி பாலாம்பாள் (ஆறு மாதம் சிறைக்குப் பின்னர் அவர் மேல் மன்ற முறையீட்டின் பேரில் விடுவிக்கட பட்டார்) பாலாபயாளின் தமக்கை அனந்தநாயகி (இப்பொழுது அகவை 65 அவர் கடந்த 11 ஆண்டுகளாகச் சிறையிலிருந்து ஓராண்டுக்கு முன் விடுவிக்கப்பட்டார்.), கலியபெருமாள் தம்பி மாசிலாமணி (அகவை 37, இவர்

(8ஆம் பக்கம் பார்க்க)

மொழி, குமுகாயம், அரசியல், பொருளியல், கலை, அறிவியல், பண்பாடு ஆகிய ஏழு துறைகளிலும் உலகத் தமிழினத்தை மேம்பாடுறச் செய்யும் ஓர் உலகளாவிய உழைப்பியக்கம். உ. த. மு. க.

★ இலங்கையில் அமெரிக்க வல்லாளுமை ★

இலங்கை இன்னுமோர் எல்சல்வடோர் ஆகப்போகிறதா?

எல்சல்வடோர்! இலத்தீன் அமெரிக்காவிலுள்ள ஒரு சிறிய நாடு. ஆனால் இன்று மாபெரும் வல்லரசாகத் தன்னைக் கருதிக் கொண்டிருக்கும் அமெரிக்க வல்லாண்மையை அடி பணிய வைத்துக் கொண்டிருக்கிறது. வியட்நாமில படித்த பாடத்தை மறக்குமுன்னர் அமெரிக்க வல்லதிகாரம் எல்சல்வடோரில் காலை வைத்து விட்டு இன்று மீள முடியாமல் தவிக்கிறது.

எல்சல்வடோரில் அரசுக்கொடுமைகளையும் வல்லாண்மையையும் முதலாளியத்தையும் எதிர்த்துப் போராடி வரும் இடதுசாரி கொரில்லாக்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 6000 தான். ஆனால் அவர்கள் கொள்கையில் உறுதியுடனும் நெஞ்சங்களில் துணிவுடனும் நடத்தி வரும் போராட்டத்தை அன்றைய டியூரெட்டினாலும் சரி இன்றைய அபியூசனினாலும் சரி எதிர்கொள்ள முடியவில்லை.

ஒன்றுமறியா மக்கள் கொலை செய்யப்படுவதும் அரசக் கொடுமை கட்டவிழ்த்து விடப்படுவதும் அங்கு பொது நிகழ்ச்சி! போராட்டம் தொடங்கிக் கடந்த மூன்று ஆண்டுகளில் அங்கு ஏற்பட்ட உயிர்பலி 30 000இற்கும் மேல் விடுதலை வீரர்கள் மாத்திரம் கொல்லப்படவில்லை; அவர்களுக்கு ஆதரவளித்தார்கள் என்ற போர்வையில் ஆயிரக்கணக்கான ஒன்றுமறியா மக்கள் கொடுமைப்படுத்தப்பட்டுக் கொடுமையாகக் கொலை செய்யப்பட்டார்கள் அரச படையினர். இழிவாக நடந்தனர்; நடந்து வருகின்றனர்.

இத்தனை நடந்தும் மாந்த உரிமைகள் பற்றி வாய்கிழியக் கத்திவரும் அமெரிக்க வல்லாண்மை என்ன செய்தது தெரியுமா? அடக்குமுறை ஆட்சியாளர்களுக்குக் கருவிகளை அள்ளி வழங்கியது. அடக்குமுறையை அரசக் கொடுமையை அதிகரித்து மக்களைக் கொடுமைப்படுத்த கோடிக்கணக்கான டாலர்களைக் கொட்டிக் கொடுத்தது. மக்களைக் கொலை செய்வதற்கான சிறப்புப் பயிற்சியை சல்வடோரின் படைத்துறையினருக்கு அமெரிக்காவில் வைத்து வழங்கியது. இந்நிலையில் சல்வடோரின் ஆட்சி அதிகாரம் டியூரெட்டின் கையில் இருந்து டி அபியூசன் கைக்கு மாறியது இந்த டி அபியூசன யார் தெரியுமா? கொலைக் குற்றம் சாட்டப்பட்டவர்; வலதுசாரிக் கொடுமையாளர்ன் தலைவராக வண்ணிக்கப்பட்டவர். அமெரிக்காவில் காலடி எடுத்து வைக்கக்கூடாது என்று தடை செய்யப்பட்டவர்.

ஆனால் இன்று அவர் அமெரிக்க அரசுக்கு நல்லவராக மாந்த உரிமைகளை மதிப்பவராக மாறிவிட்டார். அது மாத்திரமன்றி, எவர் காலடி எடுத்து வைக்கக்கூடாது எனத் தடை செய்யப்பட்டாரோ அவரை ரீகன் அரசு அமெரிக்காவுக்கு வருகை தரும்படி அழைப்பும் விடுத்துள்ளது, எதனால் தெரியுமா இந்த மாற்றம்?

இடதுசாரி போராளிகளை அழித்தொழிப்பதை டி அபியூசன் தனது முகாமையான கொள்கையாகக் கொண்டார் ஒன்றுமறியாத மக்களைக் கொலை செய்வதில் டியூரெட்டைவிட முன்னணியில் நின்றார். படைத்துறையினரை அமெரிக்காவுக்கனுப்பி சிறப்புப பயிற்சி கொடுத்து கொரில்லாக்களுடன் மோதவிட்டார். அதனால் இன்று அவர் அமெரிக்காவுக்கு நல்லவராக...செல்லப் பிள்ளையாக மாறி விட்டார்.

இத்தனை செய்தும் அங்கு நடந்தது என்ன...? விடுதலைக் கொரில்லாக்கள் தமது போராட்டத்தை விட்டுக் கொடுக்கவில்லை. அமெரிக்காவில் சிறப்புப் பயிற்சி பெற்ற அரச கருவிப் படையினரை புறமுதுகுகாட்டி ஓடவைக்கிறார்கள். சிற்றூர்ப் புறங்களைக் கைப்பற்றிச் சமவுடைமை ஆட்சியை மெல்ல மெல்ல நடைமுறைக்குக் கொண்டு வருகிறார்கள். மக்கள்கூட இடதுசாரி போராளிகளுக்கே தமது ஆதரவை வழங்குகிறார்கள்.

வியட்நாமை அடுத்து எல்சல்வடோரிலும் சூடுபட்டு விட்ட அமெரிக்க வல்லதிகாரம் இப்போது ஆசியாவில் ஒண்டுவதற்கு இடம் தேடுகிறது. இந்தியா திசைமாறி விட்டது பாகிசுத்தான் இசுலாமிய வழியை நாடுகிறது. இந்த நிலையில் தன்னுடைய வல்லதிகாரக் கொடியைப் பறக்க விடுவதற்கு ஏற்ற இடம் இலங்கை என்பதைக்கண்டு கொண்டது. அதற்கு ஏற்றாற்போல் செயவர்த்தனவும் திருவோட்டேந்தி அமெரிக்க முதலாளி இட்ட கட்டளையை நிறைவேற்றக் காத்திருக்கும் ஏவல் நாயாக நின்றார் சில தமிழ்த் தலைகளையும் சி.ஐ.ஏ. விலைக்கு வாங்கி அமெரிக்க வல்லதிகாரம் வில்லங்கமின்றி இலங்கைக்கு வர வழியை ஒழுங்கு செய்தது.

பல வழிகளிலும் இலங்கையில் அமெரிக்க வல்லதிகாரம் ஊடுருவ யூ. என். பி. முதலாளிய அரசு இடமளித்தது. இன்று ஆசியாவிலேயே அதிக அமெரிக்க உதவியைப்பெறும். நாடாக இலங்கை அமைந்திருக்கிறது ஆண்டுக்கு 1000 இலக்கம் டாலருக்கு மேல் அமெரிக்காவிடமிருந்தும் ஏறத்தாழ 10 இலக்கம் டாலர்களை மேற்கத்திய முதலாளிய நாடுகளிடமிருந்தும் இன்று இலங்கை கடனாகவும் கொடையாகவும் பெறுகிறது. அத்தோடு 35இற்கு மேற்பட்ட அமெரிக்க நிறுவனங்கள் இலங்கையில் தங்கள் செயற்பாடுகளை இப்போது விரிவாக்கியுள்ளன.

அமெரிக்க வல்லதிகாரத்தால் விலைக்கு வாங்கப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி உட்பட்ட அனைத்து முதலாளியக் கட்சிகளினதும் திட்டமிட்ட சூழ்ச்சியின் விளைவாக எந்த வகையான வில்லங்கமும் இல்லாமல் அமெரிக்க கைப்பொம்மையான செயவர்த்தனவே மீண்டும் சிறிலங்காவின் குடியரசுத் தலைவராகி விட்டார். இனிமேல் அமெரிக்க வல்லதிகாரம் இலங்கையில் எந்த வகைச் சிக்கலுமில்லாமல் வளர்ந்துவிடும் என அவர்கள் நினைக்கிறார்கள்.

திரு. செயவர்த்தன விரைவில் திருகோணமலையில் அமெரிக்கக் கடற்படைத் தளமமைக்க இடமளிக்கப் போகிறார் அது மாத்திரமன்று; திருமலையில் அமெரிக்க நிறுவனம் எண்ணெய்த் தளமமைக்க இடமளித்து விட்டார். முத்துராசவெலவில் 'வொயசு ஆப் அமெரிக்கா' வானொலிக்கு 1000 குறுக்கம் (ஏக்கர்) நிலம் அளிக்கவும் முன் வந்துள்ளார். இத்துடன் நாட்டை விற்கும் முயற்சி முடிந்ததா? மகாவலித் திட்டத்தின் கீழுள்ள நிலங்களை முதலாளிய நாடுகளிடம் விரிவாக்கப் போர்வையில் கையளிக்கவும் திட்டமிட்டுள்ளார்.

கதை இத்துடன் முடிந்துவிடவில்லை. கமுக்கமாக இருந்த ஒரு திட்டம் இப்போது அம்பலமாகியுள்ளது. ஆம்! அமெரிக்கா இலங்கைக்கு அனைத்து வகைப்பட்ட கருவிகளையும் வழங்கப் போகிறது இதற்கான கமுக்க ஒப்பந்தம் ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இன்றைய நிலையில் இலங்கைக்கு எதற்குக் கருவிகள்...? இந்தியாவுடன் போர தொடுக்கவா...? அல்லது வேறு எந்த நாட்டோடாவது போராடவா...? தமிழீழ விடுதலைப் போராளிகளை அழித்தொழிக்கவே இந்தக் கருவிக் கொள்வனவு ஒப்பந்தம் என்பது வெள்ளிடை மலையாகும். ஆனால் இவ்வொப்பந்தம் இந்தியப் பாதுகாப்பு வட்டாரங்களிடையே ஒரு பரபரப்பான சூழ்நிலையை தோற்றுவித்துள்ளது. இது குறித்து இந்தியப் பாதுகாப்பு அமைச்சில் சிறப்புக் கூட்டம் கூட்டுவிக்கப்பட்டிருக்கிறது. 'இந்தியாவைச் சுற்றியுள்ள சில நாடுகளின் போக்கு புதிராகவும் இந்தியாவின் பாதுகாப்புக்குக் குந்தகமாகவும் உள்ளது' என அண்மையில் இந்தியத் தலைமையமைச்சர் திருவாட்டி காந்தியும் கருத்து வெளியிட்டுள்ளார். அண்மைக்காலங்களாக இந்திய அரசு சிறிலங்கா அரசுக்கு எதிராக அதேவேளையில் தமிழீழ விடுதலைப் போராளிகட்கு ஆதரவாக இருந்து வருவதும் தெரிந்ததே.

இந்த நிலையில் இலங்கையில் காலடி எடுத்து வைத்திருக்கும் அமெரிக்க வல்லாண்மையும் அந்தக் காலைப் பிடிக்கும் சிறிலங்கா அரசும் சூடுபட்டுக்கொள்ளப் போகின்றன. வங்குரோத்து நிலையிலிருக்கும் சிறிலங்கா அரசுக்கு அமெரிக்கத் தலைமையின் காலை நக்குவது எவ்வளவு தேவையோ அதே போல ஆசியாவில் குறிப்பாகத் துணைக் கண்டத்தில் இந்தியா, பாகிசுத்தான் என்று ஒவ்வொரு நாடாகக் கோட்டை விட்ட அமெரிக்காவுக்கும் தனது கொடியை நாட்ட இலங்கை தேவையாகி விட்டது.

ஆனால் அமெரிக்க வல்லதிகாரம் நேற்று வியட்நாமில் படித்த பாடத்தையும் இன்று எல்சல்வடோரில் படிக்கின்ற பாடத்தையும் ஒன்று சேர்த்து நாளை இலங்கையில் படிக்கப் போகிறது. தமிழீழ விடுதலைப் போராளிகள் வல்லதிகாரத்துக்கெதிராக பட்டுமன்று; தமது நாட்டின் விடுதலைக்கும் சேர்த்துப் போராடுபவர்கள் என்பதை இந்த வல்லதிகாரத்தினர் மறந்து விட்டனர். அமிர்தலிங்கத்தையும் அவரின் அரசியல் துணைவர்களையும் விலைக்கு வாங்கிவிட்டால் மொத்தத் தமிழினம் முழுவதையும் குத்தகைக்கு எடுத்துவிட்டது போலாகிவிடும் என்று கற்பனைக் கோட்டை கட்டுகிறார்கள். இவற்றிற்கெல்லாம் தமிழீழப் போராளிகளும் மக்களும் தக்க பாடம் புகட்டுவார்கள்.

இந்தச் சமயத்தில், இன்னுமொன்று அண்மையில் நடந்த சிறிலங்கா குடியரசுத் தலைவர் தேர்தல கூட்டங்களின்போது தமிழ் மக்களது தன்னுறுதிப்பாட்டுரிமைகளை (சுயநிர்ணய) ஏற்றுக்கொள்வதாகக் கூறித் தம்மைச் சமவுடைமைக்காரர்களாக வெட்டி முழங்கிய கொல்வினை... அன்றி விசேவீராவோ அமெரிக்க ஊடுருவலை... இந்தக் குட்டுகளைத் தொட்டுக்கூடப் பார்க்கவில்லை. அல்பிரட் துரையப்பாவினதும், தியாகராசாவினதும், காவலர்களினதும் இறப்புக்களுக்கு அழுதுபுலம்பிய விசேவீராவோ அன்றி கொடபே கடுவ தெரிவு செய்யப்பட்டால் வரப்போகும் சட்ட விளைவுகளைப் பற்றி வெட்டி முழங்கிய கொல்வின்றை இவற்றைத் தொட்டுக்கூடப் பார்க்காமல் போனதும உறுதியாக வியப்பைக் கொடுக்கவில்லை. ஆனால் தமிழ மக்கள் இந்தப் போலிச் சமவுடைமைக்காரர்களை இனங்கண்டு கொள்ள வேண்டும்,

முதலாளிய வல்லதிகாரத்துக்கெதிராக போராட்டம் நடத்தி வெற்றிகளைக் குவித்துவரும் எல்சல்வடோரின் இடதுசாரிக் கொரில்லாக்களின் வழியிலே தமிழீழ விடுதலைப் பேராளிகளும் தம் போராட்டத்தைத் தொடர வேண்டும் அவர்கள் எப்படி நோக்கம் ஒன்றிற்காக வேறுபாடுகளை மறந்து ஓரணியில் திரண்டார்களோ அந்த வழியில் தமிழீழ விடுதலைப் போராளிகள் ஒன்றிணைய வேண்டும். மக்கள் முழு ஆதரவைக் கொடுக்க வேண்டும். அப்படி நடப்பின் வல்லதிகாரத்துக்கும் வன்கவர்புக்கும் சூடு கொடுப்பதில் இலங்கை இன்னுமோரு எல்சல்வடோராகும். இல்லையேல் அங்கு நடந்த 35000 படுகொலைகள் இங்கும் நடக்கும் ஏதுமறியா மக்கள் கொல்லப்பட்டு அரசக் கொடுமைகள் தாண்டவமாடும். எனவே தமிழ் மக்கள் சிந்தித்துச் செயற்பட வேண்டும். ஏனெனில் எந்த வகையில் இலங்கை இன்னுமொரு எல்சல்வடோர் ஆகப் போகிறது என்பதைத் தீர்மானிக்கப்போவோர் அவர்களே!

—உமாகாந்தன் பாரிசு
(அயலகச் செய்தியாளர்)

அகரமுதலித் துறையி[...] தமிழகமே முன்னணியில் உள்ள[...] வடநாட்டறிஞர்களின் புகழுரை!

சென்ற அக்டோப[...] 10—20 வரை புது தில்[...] சவகர்லால்நேரு பல்க[...] கழகத்தில் அகரமுதலி[...] கருத்தரங்கு நடைபெற்ற[...] தமிழ் மொழியின் சார்[...] அகரமுதலித் திறனா[...] பேரா. மு. ச. சிவம் அவ[...] கள் கலந்து கொண்[...] இந்தியா முழுவதி[...] மிருந்து மொத்தம் [...] அறிஞர்கள் கலந்[...] கொண்டார்கள். இவர்[...] பல மொழிகளின் அறி[...] பல அகரமுதலிகள[...] தொகுத்திருப்பதில் [...] டறிவும் மிகுதியாகப் பெ[...] றிருக்கும் பேரா மு. ச. சிவம் அவர்களுக்குத் [...] தனிச் சிறப்பு [...] பெற்றது. அவருக்[...] ஆய்வுக் கட்டுரை படி[...] இரண்டு மணி நேர[...] கொடுக்கப் பெற்றது. 'இருமொழி அகரா[...] களில் உருவகங்க[...] என்ற தலைப்பில் [...] தொர் ஆய்வுக் கட்டுரை படித்தார்

பேராசிரியர் மு. ச. சிவ[...] அவர்கள் ஒலிக்குறி[...] அகராதி அடுக்குமொழி[...] அகராதி ஐம்பொறி அக[...] ராதி முதலிய பல அக[...] முதலிகளை வெளியிட்[...] ருப்பதைக் கணுற்ற[...] கருத்தரங்குக்கு வந்திரு[...] பலரும் பாராட்டுக் கூ[...] னர். கருத்தரங்குத் தலை[...] திரு கபூர் அவர்க[...] "அகராதித் துறையி[...] தமிழகமே முன்னணி[...] யில் இருக்கிறது. வட[...] நாட்டிற்கு இத்துறை[...] யில் தமிழகம் தான் [...] வழிகாட்ட வேண்டு[...]" என்று கூறினர்.

அடுத்த ஆண்டு இங்[...] லாந்தில் நடைபெறவிரு[...] க்கும் உலக அகர முதலி[...] மாநாட்டில் கலந்து[...] கொள்ளுமாறு பேரா. மு. ச சிவம் அவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

தமிழின் தனிச் சிறப்பு[...] களை அகர முதலிகள் மூலம் பேராசிரியர் அவர்[...] கள் உலக அரங்கில் நி[...] நாட்டுவார்களாக!

அன்பர்கள் கவனிக்க...

சிறப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள், கட்டாயம் காரி, ஞாயிறு ஆகிய நாட்களில் மாலையில் 5 மணிக்கு மேல் வருமாறு கேட்டுக் கொள்கிறோம். வெளியூரிலிருந்து வரும் அன்பர்கள் முன் கூட்டி இசைவு பெற்று வரவும்.

—அன்பர்கள்

ஒய்ந்திடல் இல்லை,என் உள்ளமும்
உணர்வும் உயிர்ச்செறிவும்!
தேய்ந்திடல் இல்லை,என் விரல்களும்
தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை,என் உடலும்;
எனவே சலிப்பிலனாய்
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன்,
உரைப்பேன், மக்களுக்கே!

தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி 1 | 18 8 93 இதழ் எண் : 4 | பகுதி 18-19

அரசியல் கொள்கைக்காக அசாம மக்களை அழிப்பதா?

மாந்தத்தன்மையே குடியரசமைப்பின் முதற்கோட்பாடாக இருக்கவேண்டும்!

கூட்டுச்சேரா நாடுகளின் மாநாடு புதுத்தில்லியில் மிகவும் மகிழ்ச்சியுடன் தொடங்கியுள்ளது. எடுத்த எடுப்பிலேயே அணுக் கருவிக் கொள்கையை இந்தியத் தலைமையமைச்சர் திருவாட்டி இந்திரா காந்தி மிகவும் உணர்வு வேகத்துடன் கண்டித்துள்ளார். மாந்த அழிவுக் கொள்கை எந்த வடிவத்தில் இருந்தாலும் அதை எவரும் என்ன காரணத்தாலும் வரவேற்க முடியாது.

அரசியல் காரணத்திற்காக மக்கள் சுட்டுக் கொள்ளப்படுவது சரியென்று ஏற்றுக் கொள்ளப்படுமானால், பொருளியல் காரணத்திற்காகவும் அவர்கள் அழிக்கப்படலாம் என்பதையும் ஏற்றுக் கொள்ள வேண்டிருக்கும் அஃதாவது, பொருளியல் காரணம் என்பது, ஏழைகளாக இருப்பவர்கள் எல்லாரும் அழிக்கப்பட வேண்டும் என்பது.

இதை இன்னும் விளக்கமாகச் சொல்ல வேண்டுமானால், வழி வழியாக வரும் செல்வர்கள், நாட்டின் எந்தச் சூழ்நிலையிலும் தங்களிடம் உள்ள செல்வ வலிவால், தங்களைத் தக்க வைத்துக் கொள்வார்கள்; அழிந்துபோக மாட்டார்கள். ஏனென்றால் அவர்களிடம் பணம் மட்டும் இருக்கவில்லை. சூழ்ச்சி, ஏமாற்று, பதவி, அதிகாரம், ஏழைகளை வஞ்சித்தல் முதலிய அனைத்து நடைமுறைகளும் உண்டு. எனவே, இவற்றுக்கு ஏழைகளால் என்றுமே ஈடு கொடுக்க முடியாது. இனி, எந்த ஓர் அரசும், தான் செய்கின்ற ஆளுமை முயற்சிகளைப் பெரும்பாலும் ஏழைகளை நோக்கியே செய்யவேண்டி உள்ளது. முன்னேற்றத் திட்டங்கள், குடியிருப்புகள் அமைத்தல், கல்வி வாய்ப்புகளை நிரவலாக்குதல், கடன் வழங்குதல், வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தல், தொழிற்சாலைகளைக் கட்டுதல் முதலிய அனைத்து முயற்சிகள் மட்டுமின்றிச் சிற்சில நேரங்களில், சட்டங்களை இயற்றுதல் முதலிய ஆட்சி முயற்சிகளும் பெரும்பாலும் ஏழை மக்களை நோக்கியே செய்தாக வேண்டியிருக்கின்றது. இந்தத் தொல்லைகளையெல்லாம் நினைவில் கொண்டு, ஒரு குறிப்பிட்ட செல்வநிலைக்குக் கீழே உள்ளவர்களையெல்லாம் சுட்டுப் பொசுக்கி விட்டால், ஆட்சி நடத்துவது மிகமிக எளிதாகி விடலாம் அன்றோ? எனவே, ஒரு மூட அரசோ, முட்டாள் தலைமையமைச்சரோ, பொருளியல் அடிப்படையில், மக்களை அழித்தாக வேண்டும் என்று துணிவு கொண்டு விட்டால், அதைத் தடுக்க யார் முன்னுக்கு வரமுடியும்? யார் வரப்போகிறார்கள்? இன்னுஞ் சொன்னால் பணம் படைத்த எல்லாரும் இத்திட்டத்திற்கு ஊக்கமும் எழுச்சியும் அன்றோ காட்டி, அரசுக்குத் துணையாக இருப்பார்கள்.

இந்த நிலை போலவேதான், தான் கொண்ட அரசியல் கொள்கைக்கு ஒரு பகுதி மக்கள் மாறாகச் செயல்படுகிறார்கள் என்பதற்காக, அவர்களை அழிக்க முயற்சி செய்வதும். இன்றைக்கு அசாமில் நடப்பது என்ன? அரசியல் கொள்கைக்காக மக்களை அழிக்கும் முயற்சிதானே! இந்த முரட்டுப் போக்கை இந்திரா காந்தி கடைப் பிடித்துக் கொண்டு, மக்களின அழிவுக்கு வழிவகுக்கும் அணுக் கருவிக் கொள்கையைக் கண்டித்துப் பேசுவது, வெறும் மெப்புக் குப் பேசுவது ஆகாதா? பேச்சு ஒன்று செயல் ஒன்றா? அணுக் குண்டு போட்டு மக்களை அழித்தால் என்ன, துமுக்கியால் மக்களைச் சுட்டுப் பொசுக்கினால் என்ன? இரண்டும் ஒன்றுதானே, அசாம் சிக்கலில் இந்திரா போல் நடப்பது; தில்லி மாநாட்டில் காந்தி போல் பேசுவது என்றால் என்ன பொருள்? இதற்குத்தானா இந்திரா காந்தி என்று பெயர் வைத்துக் கொண்டார்?

மக்கள் எப்பொழுதும் வாயால் பேசுகிறார்கள். ஆட்சியாளர்கள் எப்பொழுதும் கையால் பேசுகிறார்கள். அசாமில் நடக்கும் படுகொலையை நினைக்கவே நெஞ்சு நடுங்குகிறது. இந்திராகாந்தி நெஞ்சு எப்படி இருக்கிறதோ, தெரியவில்லை. ஒருவேளை அணுக் கருவிக் கிடங்காக இருக்கலாமோ? அணுக் கருவிகளால் மட்டுந்தான் மக்களை அழிக்க முடியுமோ? இந்திராகாந்தியின் எண்ணமே அசாம் மக்களை அழிக்கவில்லையா? இந்தக் கொடுமையான எண்ணத்தைத் தடுக்க எந்த மாநாட்டைக் கூட்டுவது?

முடியரசைவிட, குடியரசு எந்த வகையில் சிறந்ததாக இருக்க முடியும்? மக்களை மக்களாகக் கருதும் மாந்தத் தன்மையே குடியரசமைப்பின் முதற்கோட்பாடாக இருக்க வேண்டும் இல்லையெனில், அது முடியாசைவிடக் கொடுமையானதாக ஆகிவிடும். இந்திரா காந்திகள் இதை உணர வேண்டும். இல்லெனில் எல்லா மாநிலங்களையும் அசாமாக அவர் நினைத்துப் பார்க்க நெடுநேரமாகி விடாது! மக்கள் சிந்திக்க வேண்டும். ...பட்டது. தமிழர் நாகரி

வரவேற்புப் பா

(சென்ற மாதம் நிகழ்ந்த பாவலரேறு அவர்களின் தென் மாவட்டச் சுற்றுச் செலவின் பொழுது, 18-2-83 அன்று, கடையநல்லூரில் நடந்த தமிழ்த்தென்றல் திரு.வி.க. நூற்றாண்டு விழா நிகழ்ச்சியில் பாவலரேறு அவர்களை வாழ்த்திப் பாடிய வரவேற்புப்பா!)

அன்புசால் பெரியோரே அடக்கமுடை ஆன்றோரே!
என்புருகப் பாடுகிறேன் ஈடில்லாத் தாய்மாரே
என்னினிய இளவல்காள் இளங்காளை அன்பர்காள்
அன்பாலே அனைவரையும் வரவேற்று வாழ்த்துகின்றேன்.

ஏகார்ந்த திடல்நிகழும் ஈடில்லா இம்மன்றம்
பேரார்ந்த பெரியோரை பெருமையுடன் கண்டதுதான்
சீரார்ந்த பாவலரை இந்நாளில் காண்பதுநல்
கூரார்ந்த ஆன்றோரின் நன்முயல்வே ஆனதுவே!

பாவலர் ஏறுஎங்கள் பண்புடைய பெரியோயே!
நாவால் உனைவணங்கி நலமுடனே வாழ்த்து கின்றேன்
பாவால் வரவேற்க பையலால் இயலும் என
வாவா எனப்போற்றி வருகவென வாழ்த்துகிறோம்

சிறியேன்நான் கைகூப்பிச் செந்தமிழால் வாழ்த்து
கின்றேன்
அறியேன்நான் அழகான அமிழ்தமுடை தீந்தமிழை
சிறியேன்நான் கற்றமட்டும் கனிவாகக் கழறுகிறேன்!
தறியேன்நான் தளர்ந்தேனல் தண்டனிட்டு இறைஞ்சு
கின்றேன்!

எல்லையிலா மாத்தமிழை எல்லோர்க்கும் ஈந்துவரும்
எல்லையிலாத் தமிழமுதை இனிதாக எடுத்துரைக்கும்
எல்லையிலாத் தமிழ்த்தருவை எழிலாகக் காத்துவரும்
எல்லையிலா இசைவிளங்கும் எம்கோவே வந்திடுக!

எத்துணைச் சிறப்பிருந்தும் என்னபயன் யாம்கண்டோம்?
இத்துணைச் சிறப்பிற்குமிப் பாவலரே ஈடாவார்!
பத்துதுணைப் புலவோரும் பாட்டெழுதும் பாவலரும்
அத்துணைக் கற்றோரும் அன்னார்க்கு ஈடாகார்!

பாவலர்பெருஞ் சித்திரனார் பண்புகளை யாம்கண்டால்
ஆவலுடன் அன்னாரின் அடியெற்ற(த்) தோன்றிவிடும்!
பாவாலே உலகத்தைப் பாவலரும் ஈர்த்திடுவார்!
நாவாலே இதுசொல்ல என்னறிவு போதாது!

தமிழொன்றே தன்னுயிராய்த் தமிழ்நலமும்
தன்னலமாய்த்
தமிழ்வாழ்வே தன்வாழ்வாய்த் தமிழ்நாடே
தன்நாடாய்த்
தமிழ்மொழியே தன்பேச்சாய்த் தமிழ்நடையே தன்
போக்காய்த்
தமிழினமே தன்னினமாய்த் தனியாகக் கொண்டவரே!

எந்நாளும் தமிழ்க்குநிகர் ஏதுமில்லை என்றுணர்ந்த
பொன்னனை திருவுருவே புவியேற்றும் புரவலனே!
சின்னவன்யான் கைகூப்பித் தலைதாழ்த்தி அவையின்கண்
டன் னூலார் நடையாலே வரவேற்று வாழ்த்துகின்றேன்!

'நிதி'யில்லா நெஞ்சினர்க்கு நெருப்புக் கூற்று!
நேர்மையர்க்குப் பகுத்தறிவாம் தென்றற்காற்று!
சாதிமதக் சழக் கொழிக்கும் தெற்குச்சூறை!
சமத்துவமாம் மணப்பரப்பும் நற்பூஞ் சோலை!
'நாதி'யற்று நலிந்தவர்க்கு வாழ்வின் வித்து!
நாமளக்க முடியாத தொண்டின் சொத்து!
மோதியெந்தப் பகைவரினும் முட்டும் வேழம்!
முடிவாகப் புகழுரைத்து நிற்கும் காலம்!

ச. இளமுருகன் (பாலசுப்பிரமணியன்)
பரசுராமபுரம், கடையநல்லூர்.

கேள்விப் படுகிறோம்; உண்மையா?

திருச்செந்தூர் தேர்தலில் அமைச்சர் அண்டே

பார்ப்பனர்களிடம் பூணூல் மேல் உறுதி வாங்கினாரா?

திருச்செந்தூர் இடைத் தேர்தலின் போது, அமைச்சர் அண்டே ஆரியப் பார்ப்பனரிடம் சென்று ஒப்போலை கேட்கையில் பூணூல் மீது ஆணையிட்டுக் கொடுக்கச் சொல்லியிருக்கிறார். இப்பகுதிப் பார்ப்பனர்கள் காலையில் ஒரு பூணூலும் மாலையில் ஒரு பூணூலும் அணிவது வழக்கமாம். அவர் எந்தப் பூணூலில் ஆணையிட்டுக் கொடுக்கச் சொன்னார் என்று தெரியவில்லை.

தேர்தலில் நிரம்பத் தில்லுமுல்லுகள் வேறு நடந்துள்ளன. என்று பொதுமக்களில் பலர் பேசிக் கொள்கின்றனர்.

கேள்விப்படுகிறோம்; உண்மையா?

தமிழினத்தை ஈடேற்ற ஒன்றிணைய வேண்டும்!

தேர்தல் வந்தால் ஒற்றுமை சிதறி விடக் காரணம் யாது? 'தேர்தல்' காரணம் ஆகாது. அதை நடத்தும் இயக்கத்தின் அரசியல் உள்ளடக்கம் தான் இந்த 'உடைசல்' களுக்குக் காரணமாகும்!

'இலாவணிக்கச்சேரி' நடத்துவதால் தமிழ் நாட்டு ஒற்றுமையையும் உயர்வும் சிதைகின்றன.

தேசியம் பற்றிய பொதுமைக் கருத்து மக்களை வைத்தே கருத்தாக்கம் பெறுகின்றது. தமிழின தேசியம் : வலுவாகிட 'மக்கள் இயக்கங்கள்' முறையாக முயல்தல் வேண்டும்.

"ஓர் உறுதியான ஒருங்கிணைக்கப்பட்ட அரசு வேகமான தீவிரமான பொருளியல் மற்றும் குமுக வளர்ச்சிக்கு மிகவும் தேவையான பொருத்தம் என்பதால்தான் எந்த ஒரு தேசிய இனமும் பிரிந்து போவதைப் 'போல்சுவிக்குகள்' ஆதரிக்கவில்லை. ஆனால், அவ்வாறு அந்த தேசிய இனங்கள் விருப்பினால் பிரிந்து போகும் உரிமை வேண்டும் என்ற உரிமைக்காக அவர்கள் போராடினார்கள். எந்த ஒரு நடுவப்படுத்தப்பட்ட அரசும், வன்முறையாகத் தம் அதிகாரத்தின் கீழ் தேசிய இனங்களை வைப்பதற்கு அவர்கள் எதிராக இருந்தார்கள்"

— சோவியத்து ஒன்றியம் 60 ஆண்டுகள் தேசிய இனச் சிக்கலும்சோவியத்துபட்டறிவும்
— என். இராசசேகர் — நடுவண் செயலாளர் இந்தியப் பொதுமைக கட்சி —(ஜனசக்தி, 2-1 83)

தேசிய இனங்களின் சிறைக் கூடமாகி வரும் பாரதத்தில் உள்ள பொதுமைக் கட்சிக் காரர்களுக்காக இக் கருத்தை வைத்துள்ளார்கள்!

இந்த வேளையில் 'எதிரொலி" விரிவாக வெளியிட்ட செய்தி ஒன்றையும் காண்போம்.

'வெங்காலூரில் 26-12-82 இல் அனைத்திந்திய தமிழ்ச்சங்கம் அமைக்கப்பட்டுள்ளது' இது நடத்திய கருத்தரங்க முடிவுகளை முற்றாக அறிய முடியவில்லை. ஆயினும், இதன் பொறுப்பாளர்கள் குறைந்த அளவு தங்களின் பெயரையேனும் தமிழில் வைத்துக் கொள்ள வேண்டும் இந்த வேண்டுகோள் இவர்களிடையே ஒரு பொதுவுணர்வை ஊட்டும் என நம்புகின்றோம்!

தமிழ், தமிழின ஒருமைக்காக எடுக்கும் முயற்சிகளை உ.த.மு.க. வரவேற்கிறது. அவர்களோடும் தனது உறவை உரமாக்கிக் கொள்ள விரும்புகிறது.

தமிழின மக்களின் தமிழ் மொழியைப் பேணும் குமுகாய உணர்வை உ.த.மு.க. வும் வரவேற்கிறது.

தமிழினத்தை ஒரு கட்டுக் கோட்புக்குள் கொண்டு வரப் பல கைகள் இணைவதில் நாம் மகிழ்கின்றோம். . .

கோடிக் கால் பூதமாக
கோடிக் கைகளின எழுச்சி
யாக வாழ்த்துவோம்!

— பறம்பை அறிவன்.

சிவந்திப்பட்டி - வளர்மதி மன்றம் - பாவாணர் படத்திறப்பு

14-2-83 திங்கட்கிழமையன்று மாலை ஏழுமணியளவில் சிவந்திப்பட்டி வளர்மதி மன்றத்தின் சார்பில் பாவாணர் படத்திறப்பு விழா நடைபெற்றது.

முதுகலை மாணவர் திரு ஆரோக்கியம் தலைமையேற்றார். திருச்சி திரு. குழந்தை ஈகவரசன் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடினார். திரு. செந்தி பொற்செழியன் யாவரையும் வரவேற்று உரையாற்றினார். பா். அம்பேத்கார் திருவுருவப் படத்திற்கு மாலையணிவித்து வழக்கறிஞர் திரு தங்கசாமி, க.இ.,ச.இ., உரையாற்றினார். தொடர்ந்து திரு. தென்னவன்கோ, திருச்சி திரு. குழந்தை ஈகவரசன், புலவர் அ.வெ. இராமையா ஆகியோர் பேசினர். பின்னர், பாவாணர் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து உலகத் தமிழின முன்னேற்றக்கழக முதல்வர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள், சிவந்திப்பட்டி வளர்மதி மன்றத்தைக் கழகக் கிளையாக அறிவித்துப் பேருரையாற்றினார்.

மன்றச் செயலர் நன்றி நவில, தமிழர் ஒருங்கிணைப்புப் பாடலுடன் பாவாணர் படத்திறப்புவிழா இனிதேமுடிந்தது.

தனித்தமிழ் இலக்கியக் கழகம் - திரு.வி.க. விழா

13-2-83 ஞாயிற்றுக்கிழமையன்று மாலை தனித்தமிழ் இலக்கியக் கழகத்தின் சார்பில் பாளையங்கோட்டை அரசினர் அறிவ (சித்த) மருத்துவக் கல்லூரியில் தமிழர் திருவிழா திரு வி.க. பெருவிழாவாகக் கொண்டாடப் பெற்றது. இலக்கியக் கழகத்தின தலைவர் பேரா. பா. வளனரசு, க.மு., தலைமையேற்றார்.

பொறியாளர் திரு. ஞானதோமா வாழ்த்துரை வழங்கினார்.

இறுதியில், கழகம் நடத்திய கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கி, உலகத் தமிழின முன்னேற்றக் கழக முதல்வர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் திரு. வி.க.வைப் பற்றிப் புதிய கோணத்தில் அரியதோர் விழா நிறைவுப் பேருரை நிகழ்த்தினார். கழகச் செயலர் நன்றி நவில விழா இனிதே நிறைவெய்தியது.

தென்காசி நிகழ்ச்சி

தென்காசி பகுத்தறிவாளர் கழகச் சார்பில் எ, கும்பம் 2014 (1--2-1983) அன்று நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் பாவலரேறு அவர்கள் கலந்து கொண்டார். வழக்குரைஞர் வை. பாண்டிவளவன். அறி இ;ச.மு, நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினார் தென்காசி நகர மன்ற மேனாள் துணைத் தலைவர் சண்முக சுந்தரம் வரவேற்புரை ஆற்றினார். புலவர். சங்கரலிங்கனார், சிவ. சுப்பிரமணியம், சின்னு. உ. த. மு. க. நெல்லை வடக்கு மாவட்டத்தலைவர் த. கரிகாலன். வணி. இ., பொருளர், இரா. பாண்டியன், பேரா. அறிவரசன். க. மு. ஆகியோர் உரையாற்றினர்கள். இறுதியாகப் பாவலரேறு அவர்கள் 'இன உணர்வு' எனும் தலைப்பினில் அரியதோர் உரையினை ஆற்றினார்கள். நன்றியுரை திரு. பேச்சிமுத்து கூற, கூட்டம் இரவு 11-15 மணியளவில் இனிதே முடிவடைந்தது. பாவலரேறு அவர்கள் இரவில் கடையநல்லூரில் ஓய்வு எடுத்துக் கொண்டு மறுநாள் காலை அ. கும்பம் (20-2-1983) 5-30 மணிக்கு திருநெல்வேலிக்குப் புறப்பட்டுச் சென்றார்கள்.

பாவலரேறு அவர்களின் நெல்லை மாவட்டச் சுற்றுச் செலவும், மாவட்ட அமைப்பு மாநாடும்

உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் திருநெல்வேலி (தெற்கு வடக்கு) மாவட்ட அமைப்பு மாநாட்டினை நெல்லையில் 20-2-83 ஞாயிற்றுக் கிழமையன்று நடத்துவதென மாவட்டப் பொறுப்பாளர்கள் கூடித் திட்டமிட்டனர்.

மாநாட்டு ஏற்பாடுகளைக் கவனிப்பதற்கு 'மாநாட்டு வரவேற்புக்குழு' ஒன்று அமைக்கப்பட்டது. வரவேற்புக் குழுத் தலைவராக நெல்லை (வடக்கு) மாவட்டத் தலைவர் திரு. த. கரிகாலன், வணி. இ., அவர்களும், செயலராகப் பாளை வட்டச் செயலர் திரு. சிவந்தி ப. பொற்செழியன் அவர்களும், பொருளராக நெல்லை (தெற்கு) மாவட்டச் செயலர் திரு. தென்னவன்கோ, க.மு., அவர்களும் பொறுப்பேற்றனர்.

உ.த.மு.க.வின் கொள்கையிதழான 'தமிழ்நிலத்'தின் வழியாகவும். அறிக்கைகள், சுவரொட்டிகள் வழியாகவும் மாநாட்டுச் செய்திகள் விளம்பரம் செய்விக்கப் பெற்றன. மாநாட்டினையொட்டி, மாநாட்டிற்கு வருகை தரும் உலகத் தமிழின முன்னேற்றக் கழக முதல்வர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஐயா அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் வகையில் நெல்லை மாவட்டச் சுற்றுச் செலவு அமைக்கப்பட்டது.

13-2-83 ஞாயிற்றுக்கிழமை காலை ஒன்பது மணியளவில் பாவலரேறு ஐயா அவர்கள் நெல்லை வந்து சேர்ந்தார். நெல்லைச் சந்திப்பு—பாவாசி தங் தமனையில் தங்குவதற்கான ஏற்பாடும் மாநாட்டுச் செயற்குழுக் கூட்ட ஏற்பாடும் செய்யப் பெற்றிருந்தன.

கழக முதல்வரின் முன்னிலையில் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவரும், நெல்லை (வடக்கு) மாவட்டத் தலைவரும் ஆகிய திரு த. கரிகாலன், வணி இ., வடக்கு மாவட்டச் செயலர் திரு. அ தமிழன்பன், பொருளர் திரு. இரா. பாண்டியன், தென்காசி உ.த.மு க. தலைவர் திரு. தூய அன்பறிவன், சங்கரன் கோவில் மேனாள் நகராட்சித் தலைவரும், நெல்லை மாவட்டப் பகுத்தறிவாளர் கழகத் தலைவரும் ஆகிய திரு அ. பழனிச்சாமி, வணி.இ., நெல்லை (தெற்கு) மாவட்டத் தலைவர் புலவர் சிவசங்கு, தெற்கு மாவட்டச் செயலரும், மாநாட்டுப் பொருளரும் ஆகிய திரு தென்னவன்கோ, க.மு., பாளை வட்டச்செயலரும், மாநாட்டுச் செயலரும் ஆகிய திரு. சிவந்தி ப. பொற்செழியன், நெல்லை வட்டச்செயலர் திரு. தென்மாறன். நெல்லை நகரச் செயலர் திரு பொருணையன், சிந்துபூந்துறை திரு தோ. காசினிவேந்தன், திருச்சி திரு. குழந்தை ஈகவரசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் இரண்டு தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேறின.

1. விடுபட்ட மாவட்ட, வட்ட உ.த.மு.க. அமைப்புகளின் பொறுப்பாளர்கள் அமர்த்தம் மார்ச்சுத் திங்களுக்குள் நிறைவு செய்யப் பெறல் வேண்டும்.

2. மாவட்ட, வட்டப் பொறுப்பாளர்கள் யாவரும் 'தமிழ்நிலம்' பெறுதல் வேண்டும். அத்துடன் பலருக்கும் பரப்புதல் வேண்டும்.

உ.த.மு.க. நெல்லை (தெற்கு, வடக்கு) மாவட்ட அமைப்பு மாநாடு

உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் நெல்லை (தெற்கு, வடக்கு) மாவட்ட அமைப்பு மாநாடு நெல்லை நகர் பாரதியார் தெருவில் அமைந்துள்ள காமாட்சி திருமண மண்டபத்தில் 2--2-83 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி முதல் இரவு 10 மணி வரை நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டன. நெல்லை (வடக்கு) மாவட்டச் செயலர் திரு. அ. தமிழன்பன் அவர்களும், தெற்கு மாவட்டச் செயலர் திரு. தென்னவன்கோ அவர்களும் முதல் நாள் இரவே மண்டபத்தில் தங்கியிருந்து ஏற்பாடுகளைக் கவனித்துக் கொண்டனர்.

ஞாயிறு அன்று காலை 11 மணியளவில் மாநாட்டின் முதல் நிகழ்ச்சியாகக் கருத்தரங்கம் தொடங்கியது. திருச்சி திரு. குழந்தை ஈகவரசன் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடினார் பாளையங்கோட்டை—தூயயோவான் கல்லூரிப் பேராசிரியர் பா. வளனரசு, க.மு., அவர்கள் கருத்தரங்கத் தலைமையேற்றார். கழகக் கொள்கைகளே கருத்தரங்கத் தலைப்புகளாகக் கொள்ளப் பெற்றன. மாநாட்டிற்கு வந்திருந்தோர் யாவரையும் நெல்லை (வடக்கு) மாவட்டத் தலைவர் திரு. த. கரிகாலன் வரவேற்றார். தலைமையுரையைத் தொடர்ந்து "மொழி" பற்றி நெல்லை (தெற்கு) மாவட்டத் தலைவர் புலவர் சிவசங்கு உரை நிகழ்த்தினார். 'குமுகாயம்'—பற்றிச் சங்கரன் கோவில் மேனாள் நகராட்சித் தலைவரும். நெல்லைமாவட்டப் பகுத்தறிவாளர் கழகத் தலைவரும் ஆகிய திரு அ. பழனிச்சாமி வணி. இ, அவர்களும் 'பொருளியல்' –என்னும் தலைப்பில் நெல்லை (வடக்கு) மாவட்ட உ. த.மு.க. செயலர் திரு. அ. தமிழன்பன் அவர்களும் 'கலை'—பற்றிப் புலவர் இராசகோபாலன் அவர்களும் உரையாற்றினர். வருவதாக இசைவளித்திருந்த ஒரிருவர் மாநாட்டிற்கு வரவேயில்லை. திருக்குறுங்குடி திரு. சங்க—தமிழ்ச் செல்வன் நன்றி நவில முற்பகல் நிகழ்ச்சி நிறைவெய்தியது.

பிற்பகல் 3 மணியளவில் பாட்டரங்கம் அரங்கேறியது. பாட்டரங்கத் தலைமையேற்க இசைவு தெரிவித்திருந்த தலைவரும், பங்கேற்க இசைவளித்திருந்த சிலரும் வாராதிருந்தமையால் தூத்துக்குடிப் பாவலர் திரு. நா. புகழேந்தி தலைமையேற்றார். கடையநல்லூர் உ.த.மு.க. தலைவர் திரு. கலைச்செல்வன் வரவேற்புப்பா அளித்தார்.

திருவாளன்மார் இரா, பாண்டியன், பாலசுப்பிரமணியன் ஆகியோரும், திருச்செந்தூர் ஆதித்தனார் கல்லூரி ஆங்கிலப் பேராசிரியர் திரு. ஆழ்வார், க.மு., அவர்களும பாட்டரங்கேறினர். கடையநல்லூர் உ.த.மு.க. செயலர் திரு. மு பழனி, க.இ., நன்றிப்பா வழங்கினார்.

மாலையில் "தமிழின முன்னேற்றத்திற்கு உடனடித்தேவை குமுகாய மாற்றமா? பொருளியல் மாற்றமா?"-என்ற தலைப்பில் பட்டி மன்றம் நடைபெற்றது. அறிக்கையில் குறிப்பிட்டவாறு நடுவர் உட்படப் பலரும் வாராதிருந்தமையால்; தென்காசி வழக்கறிஞர் திரு. வை. பாண்டி வளவன், அறி இ;ச.மு, நடுவராகப் பொறுப்பேற்றார். 'குமுகாய மாற்றமே' - என்ற அணித் தலைவராகத் திரு. அ. பழனிச்சாமி அவர்களும், அவருக்குத் துணையாகத் திரு. நெடுஞ்சேரலாதன் அவர்களும், 'பொருளியல் மாற்றமே'- என்ற அணித் தலைவராகத் திருச்செந்தூர் ஆதித்தனார் கல்லூரிப் பேராசிரியர் திரு. பாசுக்கரப் பால் பாண்டியன், க.மு., அவர்களும், அவர்க்குத் துணையாகச்

(தொடர்ச்சி 5-ஆம் பக்கம்)

ஒரு வருத்த மடல்!

சென்னையில் நடந்த இலங்கை மலையகத் தமிழ உரிமைக் காப் மாநாட்டில் அவலம்!

பாவலரேறு ஐயா அவர்களுக் வணக்கம். பெரியாா் திடலில் பிப 19 20-இல் நடந்து முடிந்த மலை தமிழர் உரிமைக் காப்பு மாநாட் நடந்த ஒரு துயரக் காட்சியை தங்கள் கவனத்திற்குக் கொ வர விருப்புகிறேன்.

மேற்படி மாநாட்டில் 'தமி மக்கள் விடுதலை இயக்கத்'தின் ம வர் பிரிவினரென்று சொல்லப் வர்கள் ஒரு துண்டு வெளியீட் வெளியிட்டனர். அதைத் தொடர் மாநாட்டை ஏற்பாடு செய்தி வர்கள் காவல் துறையினரை செய்து இளைஞர் ஒருவரைத் (கைது) செய்யச் செய்தனர். டாந்தடியுடன் கழுத்துப் பார் அதிகாரிகளின் கூட்டத்தில் ய யோ மேலும் தேடி அலைந்தனர். போது 'தலைவர்' ஒருவர் தம் ந ரிடம் 'முகுந்தனை" (விடுதலைப் மட்டும் 'காட்டிக் கொடு' எ உத்தரவிடுகிறார். சிறிது நேர முகுந்தன்' காவலர் அதிகாரி அழைத்துச் செல்லப்படுகிறார். டத்தில் பரபரப்பு. அரங்கிற்கு யில் வந்த 'முகுந்தன்' அவர் 'என்னைத் தனை செய்தாலன்றி யே வரமுடியா'தென்று கூ காவலர் அதிகாரி சினம் அடை நல்லவேளையாகச் சற்று முன் கூ திற்குத் தலைமை தாங்கிய வழ ஞர் திரு. இராதாகிருட்டினன் யிட்டு 'முகுந்தன்' அவர்களை அ துச் சென்றார்.

மாநாடு நடத்தியவர்கள் ந கொண்ட முறையால் திரு முத அவர்களை (அறியாத பலரும்) ஏதோ குழப்பக்காரர் போல் துப் பேசுதற்கு ஏதுவாயிற்று. அவரை அறியாத காவலர் அ கள் சிலர் 'இவர்தான் முகு என்று அடையாளம் கண்டு தையும் கேட்டேன்.

தமிழ்ஈழ விடுதலை இயக்கத் ரில் பல நடைமுறை வேறுபா வர்கள் இருப்பினும், அவர்கள் ரும் நம்மவர்க்கு (இங்குள்ளவ வேண்டியவரன்றோ? எனவே களைத் தனியே அழைத்து, நி யை விளக்கி வெளியேறச் செய் கலாமே. எல்லாம் அமைவா முடிந்திருக்க முடியும். இத் முன் அறிவுகூட இல்லாதவர் இங்கு 'தலைவர்கள்'!

எனினும் காவலர் அதிகா டம் 'காட்டிக் கொடு' என்று திரு மலர்ந்தருளிய 'தலைவரின்' அறி என்னென்பது?

அன்பன்,
செ. நடராசன்
கருணாநிதிநகர், சென்னை.

O

திராவிட இயக்கத்தின் முழுவடிவம் அ.தி.மு.க.வாம்!

இந்தி அரக்கியை அடித்து விரட்டுவோம்!

நடுவணரசு மண்டைஓடு சுமந்து பேயாட்டம் போடுகிறது

அமைச்சர் காளிமுத்து நேருரை!

தமிழ்நாடு அரசு வேளாண்மைத்துறை அமைச்சர் பண்டாரகர் காளிமுத்து அவர்கள் குளித்தலை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்பாடு செய்திருந்த பொங்கல் விழாப் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசினார்.

அவருடைய சொல்லாற்றல் தமிழிய நோக்கும், திராவிடப் போக்கும் உள்ளதாக இருப்பதை அறிந்தேன். இளையவராகவும், கட்டுடல் மிக்கவராகவும் அவர் விளங்குவதைக் கண்டேன். இத்திறத்தினர் எப்படி வேற்றின உள்நோக்கு குழுமி ஆட்சி செலுத்தும் அமைச்சர் குழுவில் ஒன்றி செயல்பட முடிகிறது என்றும் வியந்தேன்.

அமைச்சர் காளிமுத்து திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் மு. கருணாநிதியை தாக்கிப் பேசியதையும், அவர் சார்ந்துள்ள கட்சித் தலைவரை உயர்த்திப் பேசியதையும் நீக்கிவிட்டுத் தமிழர்கள் நெஞ்சம் உணரும்படி அவர் ஆற்றிய உரையை முடிந்தளவு சுருக்கிக் கொடுக்கிறேன். தமிழ் நெஞ்சங்கள் உணர்ந்து செயல்படுமாக.

'உலகமே புகழத்தக்க, சீர்த்தி மிக்க திராவிட இனம்; வேறுபாடும், பிளவும், பிணக்கும் இல்லாமல் இருக்க திராவிட இயக்கம் தோன்றியது. மூடநம்பிக்கையைக் களையபகுத்தறிவுப் பரப்புதலை பெரியார் செய்தார். மதச் சடங்குகள், போக்குகள், தொன்மையான (சாஸ்திர சம்பிரதாய இதிகாச) பழக்க வழக்கங்களை, சாதிய உணர்வுகளைக் களைய வேரில் வெந்நீர் ஊற்ற வேண்டும்.

அண்ணா இந்திக்கு இடமில்லை என்றார் அண்ணா உருவாக்கிய மறுமலர்ச்சி அண்டை மாநிலங்களில் பரவி இருக்கிறது. நெல்லிக்காய் மூட்டை போல் இருந்த தமிழக அரசியலில் ஓர் ஒட்டுமொத்த உணர்வை உருவாக்கினார். இந்தி(ய) தேசிய ஆட்சியை வீழ்த்தினார். ஓர் உரையில் இரண்டு வாள் இருக்க முடியாது. அ.தி.மு.க.வும், தி.மு.க.வும் ஒன்றாக இருக்க முடியவே முடியாது. தி.மு.க. கருணாநிதியின் பிள்ளைகள், மருமக்கள் முதலியோரின் குழுமம் ஆகிவிட்டது.

நடுவணரசு எம்.சி.ஆரைப் பயன்படுத்தித் தமிழ் நாட்டை ஆட்கொள்ளத் (ஆக்ரமிக்க) திட்டமிட்டது. எம்.சி. ஆர். புரிந்துகொண்டார். அதற்கு இடங்கொடுக்கவில்லை. கருணாநிதி இந்திராவுடன் சேர்ந்து தமிழ்நாட்டை நடுவணரசிற்கு அரவணைத்துப் போக வைக்கப் பாடுபடுகிறார். தமிழர் மானத்தை அவர் நினைக்கவில்லை. நல்ல அரசியல் நடத்த மனமில்லா விட்டால் வெளிநாட்டிற்குச் செல்லட்டும். சாரவுணவு பசி போக்கும் திட்டமன்று; ஊட்டமளிக்கும் திட்டம். ஏதிலியருக்கு அகவை முதிர்ந்தோருக்கு உணவளிப்பது சிறப்பல்லவா? ஆலை முதலாளிகள் அகவையானவராக இருப்பின் அவர்களுக்குச் சோறு போடும் திட்டமன்று.

திராவிட மரபின் (பாரம்பரியத்தின்) ஒட்டுமொத்த முழுவடிவமான அ.இ.அ.தி.மு.க.வின் தலைவர் எம். சி. ஆரால் தான் இந்த நாடு திராவிட கொள்கையைக் கொண்டு செலுத்த முடியும்.

இந்திராவிற்கு நாணயமில்லை; நன்றி உணர்வு இல்லை. பெரியகுளம் தேர்தலில் தி.மு.க. அ.தி.மு.க. இடையில் சிக்கி நசுங்கி இந்திரா (காங்கிரசு) பேராயக்கட்சி உயிரிழந்தது. அ.தி.மு.க—தி.மு.க.வை மோதவிட்டு வெற்றியடைய இந்திரா பேராயம் பார்க்கிறது இந்திரா நடுவணரசில் (பாதுஷா) மாமன்னராக இருக்கலாம்; தமிழ்நாட்டில் (பக்கிரி) இரப்பவர் தான். விலைக்கு மோர் வாங்கி வெண்ணெய் எடுக்கப் பார்க்கிறார் இந்திரா. இந்திராவின் மணிமுடி இறக்கப்படும். இராசீவ்காந்தி, ஆந்திர முதல்வர் அஞ்சய்யா திராவிட (அரி

அறிவின் முனைவன

சன்) வகுப்பைச் சேர்ந்தவர் என்பதால் அவரின் வரவேற்பை அவமானப்படுத்தினார். கருநாடக முதல்வர் குண்டுராவ் உயர்ந்த இராவ் வகுப்பை சேர்ந்தவராகையால அவரின் வரவேற்பை ஏற்றார். எங்களை மாநிலக் கட்சி என்கிறார் இந்திரா உத்திரப் பைதிரத்தின் மாநிலக் கட்சியாக இந்திரா பேராயப் ஆகப் போகிறது. இடைத் தேர்தல்களுக்குப் பிறகு இந்திரா பதவியை விட்டு விலகி இருக்க வேண்டும்.

அனல் மின்சாரம் எடுக்க நிலக்கரி வாங்கத் தடை; மற்ற மாநிலங்களில் உணவு பெறத் தடை; தமிழ்நாட்டு மக்களை வாட்டித் துன்புறுத்த நினைக்கிறார் இந்திரா. நடுவணரசுமதர்ப்போடு (திமிரோடு) நடக்கிறது. என் கட்சிக் கொள்கைகளைப் பேசினால் காளிமுத்து திட்டுகிறார் என்கிறார்கள், நான் கொள்கை பேசுகிறேன்; நீங்களும் பேசுங்கள். உன் படையே (பட்டாளம்) திரண்டு வந்தாலும் ஒன்றும் செய்துவிடமுடியாது. அரசியலில் மதிக்க தெரிந்து கொள்ளுங்கள். அரசியலில் அகங்காரப் (ஆணவப்) போக்கை அடக்கியே தீருவோம். வடநாட்டின் கொள்ளைப்புறமாக தமிழ்நாட்டை ஆக்கப் பார்க்கிறார்கள். இந்திக் கிளர்ச்சியில் பலபேரை இழந்தோம். இந்தி அரக்கி அரத்தம் கேட்கிறாள். எண்பத்தொரு (மொழிப் பெயர்களை மூச்சுவிடாமல் கூறி வியக்க வைத்தார்,) பல்வேறு இந்தி மொழிகள் இருக்கின்றன. அது எப்படி பெரும்பான்மையோர் பேசும் மொழியாகும்.

பெரியாரின் பகுத்தறிவுக் (சித்தாந்தம்) கொள்கை பாழ்பட்டு விட்டது. தமிழர் நாகரிகம் வீணாகிவிட்டது. தமிழர் இரண்டாந்தர இனமாகிவிட்டனர். தமிழ் இனம் பொருட்காட்சி இனமாக உலகில் மாறிவிடும் சூழ்நிலையில் இருக்கிறது. தமிழ்நாட்டில் எந்தக் கட்சியானாலும் தமிழ்காக்கும் போராட்டத்தில் ஒன்றுபட வேண்டும்.

நடுவணரசு மண்டை ஓட்டைச் சுமந்து பேய் மனப்பான்மையில் ஆட்டம் போடுகிறது. நாம் திரண்டெழுந்து ஒருமுகமாக நின்று இனமானம் காப்போம்' இவ்வாறு காளிமுத்து உரையாற்றினார்.

அவருடன் உரையாடிச் (பேட்டி கண்டு) சில கருத்துகளை அறிய எண்ணினேன். நேரமில்லை. அவர் உடன் சென்னை புறப்பட்டார்.

எம்.சி.ஆர். தலைமையில் தான் திராவிட இயக்கம் முழுவடிவம் பெற்றுள்ளது என்கிறார் காளிமுத்து. இது உண்மையா? எம்.சி. ஆர் தமிழை, தமிழரைக் காக்கும் பேராளர் என்கிறார். அஃது எப்படி? அவர் பேச்சின் சாரத்தில் கடைசி இரண்டு பத்திகளை உன்னிப்பாகப் படியுங்கள். யாரால், எவரால் என்ற கேள்விகளை எழுப்புங்கள். உண்மை விழித்தெழும். ஒரு தமிழர் காளிமுத்து கட்சிக் கட்டுப்பாட்டிற்காகப் பேசினாலும், சில உண்மைகளை வரை மீறி உணர்ச்சியோடு பேசியிருக்கிறார். அவரின் உள்ளுணர்வு புரிகிறது.

தமிழ் நெஞ்சங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

முகவர்கள் கவனத்திற்கு!

ஓர் இதழ் இடைவிடாமல் நடப்பதற்கு முழுப்பொறுப்பும் முகவர்களுடையதே! தமிழினத்தை ஈடேற்றும் அருப்பணியை மனத்தில் இருத்தி, இதழ்களைப் பரவலாக விற்பனைச் செய்ய எந்த அளவில் முயற்சி எடுத்துச்செயல்பட இயலுமோ அந்த அளவே இதழின் வளர்ச்சி அமையும். தனியாக ஏதாமோர் இதழுக்குத் துணை இருக்கிறோம் என எண்ணாமல் தமிழ்நிலம் - காக்கும் ஓர் அரிய இதழைக் கட்டிக் காக்க வேண்டுமென ஒவ்வொருவரும் எண்ணி முடிந்தவரை இதழ் விற்பனையை அதிகப் படுத்தியும், தத்தம் நிலுவைத் தொகை தேங்காமல் விரைந்து அனுப்பியும் இதழ் சுணங்காமல் வர ஆவன செய்ய வேண்டுகிறோம்

— அமைச்சர்.

உயர்வகுப்பாரின் பதவிக் கொள்ளைகள்!

- நடுவண் அரசின் ஆளுமையின் கீழ் இயங்கும் அமைச்சகங்கள், பொதுத்துறை நிறுவனங்கள் ஆகிய அனைத்திலுமாக உள்ள முதல்நிலை அதிகாரிகளின் பதவி எண்ணிக்கை: 1,7?0,?6.
  இவர்களில் தாழ்த்தப்பட்டோர் 5.6. விழுக்காட்டினர்.
  பிற்படுத்தப்பட்டோர் 4.69 விழுக்காட்டினர்.
  பதவிக் கொள்ளையர் 90.25 விழுக்காட்டினர்.
- நடுவண் அரசின் அனைத்துத் துறைகளிலும் உள்ள இரண்டாம் நிலை அதிகாரிகளின் பதவி எண்ணிக்கை: 9,12,?25
  இவற்றில், தாழ்த்தப்பட்டவர்கள் 18.18 விழுக்காட்டினர்.
  பிற்படுத்தப்பட்டவர்கள் 10.63 விழுக்காட்டினர்.
  பதவிக் கொள்ளையர் 71.19 விழுக்காட்டினர்.
- மூன்றும் நிலை, நான்காம் நிலை அதிகாரிகளின் மொத்தப் பதவி எண்ணிக்கை: 4,84,687.
  இவற்றில், தாழ்த்தப்பட்டவர்கள் 24.4 விழுக்காட்டினர்.
  பிற்படுத்தப்பட்டவர்கள் 19 விழுக்காட்டினர்
  பதவிக் கொள்ளையர் 56.96 விழுக்காட்டினர்.

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

செல்வி. சு. செல்லம்மாள் வணி.இ. அவர்களும் பட்டி மன்ற மேறினர். வருவதாக இசைவளித்திருந்த 'தமிழர்'கள் சிலர் வாராதிருந்த சமையத்தில் வந்திருந்து துணிச்சலாகக் கலந்து கொண்ட பார்ப்பனப் பெண் செல்வி. சு. செல்லம்மாள் தமிழர்களின் நாடிநாம்பினைச் சுண்டிப் பார்த்துச் சென்றமை பாராட்டிற்குரியது. மாவட்டச் செயலர் திரு. அ. தமிழன்பன் நன்றி நவின்றார்.

இறுதியில், கொள்கை விளக்கப் பேருரை நிகழ்ச்சிக்கு நெல்லை (தெற்கு) மாவட்ட உ.த.மு.க. தலைவர் புலவர் சிவசங்கு அவர்கள் தலைமையேற்றார். நெல்லை (வடக்கு) மாவட்டச்செயலர் திரு. அ. தமிழன்பன் யாவரையும் வரவேற்றார். தலைமையுரைக்குப் பின்னர் கழக முதல்வரையும் கழகத்தையும் அறிமுகம் செய்து வைத்து நெல்லை (வடக்கு) மாவட்டத் தலைவர் திரு. த. கரிகாலன், தெற்கு மாவட்டச் செயலர் திரு. தென்னவன் கோ பொருளர் திரு. த. அன்பழகன், வடக்கு மாவட்டப் பொருளர் திரு. இரா. பாண்டியன் இராதாபுரம் வட்டச்செயலர் திரு. க. இளந்திரையன்; க.இ.,கல்.இ; புலவர் திரு. சேரை இராமசாமி, க.மு. ஆகியோர் உரையாற்றினர்.

மேல நீலித நல்லூர் மூத்துராமலிங்கனார் கல்லூரிப் பேராசிரியர் திரு. மு. செ. அறிவரசன், க.மு., வாழ்த்துரை வழங்கினார்.

உலகத் தமிழின முன்னேற்றக் கழக முதல்வர் பாவலரேறு பெருஞ்சித்திரனார், கழகத்தின் கொள்கைகளை விளக்கி அரியதொரு நிறைவுப் பேருரை நிகழ்த்தினார்.

மாநாட்டு வரவேற்புக் குழுச் செயலர் ஆகிய திரு. சிவந்தி. ப. பொற்செழியன் நன்றி நவின்ற பின்னர், தமிழர் ஒருங்கிணைப்புப் பாடலுடன் உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் திருநெல்வேலி (தெற்கு, வடக்கு) மாவட்ட அமைப்பு மாநாட்டு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவடைந்தன.

அன்று இரவு 1 மணிக்குக் கழக முதல்வர் பாவலரேறு ஐயா அவர்கள் திருச்சிக்கு வழியேகினார்.

— செய்தியாளன்

O

அதிகக் குழந்தைகள் பெற்றுக் கொள்ள ஊக்கம் அளிக்கும் நாடு

உலகப் புள்ளி விளக்கங்களின்படி, முன்னேற்றமடைந்த மற்ற நாடுகளைவிட உருசிய ஒன்றியத்தில் மக்கள் தொகை மிகு வேகமாக வளர்கிறது; எனினும் இது போதாதென்று மக்கள்-தொகை-இயலாளர்கள் கருதுகின்றனர். இதுபற்றி மக்கள்-தொகை-இயலாளரான திரு. விக்தர் பெரெவெதெந்தசேவ், பின்வரும் கருத்துகளை வெளியிட்டார்.

உருசிய ஒன்றியத்தின் மக்கள் தொகை சீராக அதிகரித்து வருகிறது என்பது உண்மை. எனினும் இவ் வளர்ச்சி விழுக்காடு ஒரு பத்தாண்டை விட அடுத்த பத்தாண்டுக் காலத்தில் குறைந்து கொண்டு வருகிறது.

மக்கள் தொகைச் சமநிலையைப் பாதுகாக்க வேண்டுமானால், ஒவ்வொரு நூறு குடும்பத்திற்கும் 260 குழந்தைகள் மேனியாவது பிறக்க வேண்டும்.

"நூறு குடும்பங்களில் 260 குழந்தைகள் பிறக்க வேண்டிய தேவை என்ன? இன்னும் சிறிது குறைவாகப் பிறந்தால் போதாதா?" என்று கேட்கலாம். எல்லாப் பெண்களுமே திருமணம் செய்து கொள்கிறார்கள் என்பதில்லை; திருமணம் செய்து கொள்ளும் எல்லாப் பெண்களுக்குமே குழந்தைகள் பிறக்கும் என்பதும் இல்லை. தவிர எல்லாக் குழந்தைகளும் தங்கள் பெற்றோரைப் போல் அவ்வளவு நீண்ட நாள் வாழும் என்பதில்லை. பிறக்கும் குழந்தைகளில் ஆண்களைவிடப் பெண்களின் தொகை குறைவு. மக்கள் தொகை வளர்ச்சி பெண்களின் எண்ணிக்கையைப் பொறுத்துத்தான் இருக்கிறது. ஒரு நாட்டின் வெற்றிகரமானப் பொருளியல், குமுகாய வளர்ச்சிக்கு, மக்கள் தொகை அதிகரிப்பது தேவையானது ஆகும். இதற்கு ஒரு குடும்பத்தில் ஏறத்தாழ மூன்று குழந்தைகளாவது பிறக்க வேண்டும்.

ஓர் இயல்பான உருசியக் குடும்பத்தில் ஒன்று அல்லது இரண்டு குழந்தைகள் மட்டுமே உள்ளன. மக்கள் தொகை பற்றிய ஒரு கணிப்பில் ஒரு குழந்தை பெற்றுக் கொள்ள எல்லாப் பெண்களும், இரண்டாவது குழந்தை பெற்றுக் கொள்ள அவர்களில் பாதிப்பேரும் விருப்பம் தெரிவித்தனர். மூன்றாவது குழந்தை பெற்றுக் கொள்ள விரும்பிய பெண்கள் மிகவும் குறைவு.

குறைவாகக் குழந்தைகள் பெற்றுக் கொள்ளப் பெண்கள் விரும்புவானேன்? இஃது இயற்கையே. ஏனெனில், குழந்தைகள் இறந்துபோகும் விழுக்காடு, மருத்துவத் துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் காரணமாகப் பெரிதும் குறைந்துள்ளது. முதுமைக் காலத்தில் மக்கள் நலனை உருசிய அரசு கவனித்துக் கொள்வதால் அக் குழந்தைகளை நம்பியிருக்க வேண்டியத் தேவையில்லை. தவிர, பெண்களின் குமுகநிலையும் மாறியுள்ளது. இன்று உருசியப் பெண்களில் மிகப் பெரும்பாலானவர்கள் குமுகாயத்திற்கான ஆக்கப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

ஒரு குடும்பத்தில் மூன்றாவது குழந்தை பிறப்பது பற்றி அந்தக் குடும்பத்தைவிட குமுகாயத்திற்கு அதிக அக்கறை ஏற்பட்டுள்ளது.

உருசிய அரசைப் பொறுத்தவரையில், அதிகக் குழந்தைகள் உள்ள குடும்பங்களுக்குப் பலவகையான சலுகைகளை அளிக்கிறது. இதை வேறு வகையாகச் சொல்வதானால், இல்லறத்தார்கள் அதிகக் குழந்தைகள் பெற்றுக் கொள்வதற்கு இந்தச் சலுகைகள் மூலம் அரசு ஊக்கம் அளிக்கிறது. இந்தக் கொள்கை பயனளிக்கும் என்ற நம்பிக்கைக்கு இடமிருக்கிறது.

தமிழ்நிலம் தாளிகையின் வெளியீட்டு அறிக்கை

(நடுவணரசுச் செய்தித்தாள் பதிவுச் சட்டம் 1955)
19 ஈ ஆ (வகுப்பு 8- ஆம் கட்டளைப்படி.)

1. வெளியிடும் இடம் : சென்னை
2. கால முறை : கிழமை ஒருமுறை
3. அச்சிடுவோர் பெயர் : திருவாட்டி. மா. தாமரை
   இனம் : தமிழர்
   முகவரி : தென்மொழி அச்சகம், சென்னை-5
4. வெளியிடுவோர் பெயர் : திரு. பெருஞ்சித்திரனார்,
   இனம் : தமிழர்
   முகவரி : தென்மொழி அச்சகம், சென்னை-5
5. ஆசிரியர் பெயர், முகவரி : திரு. பெருஞ்சித்திரனார், சென்னை-5

ஒரு விழுக்காட்டிற்கு மேல் முதலீடு செய்துள்ள தாளிகை உரிமையாளர், கூட்டாளர் இவர் தம் பெயர்களும், முகவரிகளும் : திரு. பெருஞ்சித்திரனார், சென்னை-5

பெருஞ்சித்திரனாராகிய நான் மேலே குறிக்கப்பட்டுள்ள விளக்கங்கள் யாவும் நானறிந்தவரை உண்மையென்று உறுதி கூறுகின்றேன்.

13—2—1983
சென்னை-5

பெருஞ்சித்திரனார்
(ஒப்பம்.)
பெருஞ்சித்திரனார்

மண்டபம் பாசறை நடுவண் மீன் ஆராய்ச்சி நிலையம்!

தமிழையும் தமிழ்ப் பண்பையும் தவற விட்டு இயங்கும் கொடுமை!

இங்குள்ள மண்டபம் நடுவண் மீன் ஆராய்ச்சி நிலையம் தமிழ் நாட்டில் இருந்தாலும் ஏதோ கடல் கடந்த வெள்ளைக்கார நாட்டில் இருப்பது போல் இருந்தது. காரணியம் இங்குப் பணியாற்றும் அறிவியலறிஞர்களில் நூற்றுக்கு நூறு விழுக்காடு பிறமாநிலத்தாரே; தப்பித்தவறி தமிழன் ஒருவன் இருந்தால்கூட அவன் வாயில் தமிழே வராது. ஏதோ இங்கிலாந்திலோ அல்லது அமெரிக்காவிலோ இருந்து தொப்பென்று இந்த நிலையத்தில் குதித்தவன் போல நடந்து கொள்வான். சாப்பிடலில் இருந்து களியாட்டங்கள் வரை எல்லாம் மேலைநாட்டுப் பழக்க வழக்கங்களோ விருந்தெனும் பேரில் துணைவியரை மாற்றித் துய்க்கும் களியாட்ட நடனங்கள் நாளொரு மேனியும் பொழுதொருவண்ணமுமாக நடந்தன. இயற்கையிலேயே மீனாராய்ச்சிக்கு மேனாட்டு அறிவியல் அறிஞர்களால் சிறந்த இடம் என ஏற்றுக் கொள்ளப்பட்டு இந்தியாவிலேயே இந்த இடத்தைத் தெரிவு செய்து நிலையம் அமைத்தனர். ஆனால் ஆராய்ச்சியில் தன் அறிவை ஓர் அணுவேனும் செலுத்தாது. வளப்பமான வாழ்க்கை அமைப்பதிலேயே தம் அறிவைச் செலுத்திய மேனாள் அறிஞர்கள். இவ்விடம் தங்கள் பொழுதுபோக்குக்கு ஏற்றதில்லை எனவும் (முழுக்க முழுக்க ஓரளவு தமிழ்ப்பண்பாடுகள் சிதையாமல் அன்று இருந்ததால்) தங்களின் களியாட்ட நிலைகள் வரம்பறிந்து இகழ்ச்சியாகக் கருதப்பட்டதால் சரிப்பட்டு வராது எனவும் உள்முக எண்ணங் கொண்டு. வெளியில் அரசிடத்தில் இவ்விடம் தங்கள் கல்வி, மருத்துவ ஏந்துகட்குப் பயனற்றது என்று காரணியம் காட்டி, ஒட்டுமொத்தமாகக் கொச்சிக்கு மாற்றினர் தலைமை அலுவலகத்தை.

வேலைவாய்ப்பைப் பொறுத்தவரை மூன்று, நான்காம் பிரிவுகட்கு மட்டுமே அமர்த்தப்படும் கூலித்தமிழன் அந்த ஒரு வேலை வாய்ப்பையும் இழந்தான்.

இப்போது இருக்கின்ற இம்மண்டல ஆராய்ச்சி நிலையத்தில் மேனிலை கீழ்நிலை அதிகாரிகள் பெரும்பான்மையும் மொழியால் இனத்தால் தமிழர்களாயினும், செயல்களால் ஆரியர்கள் வெள்ளையர்களே. அங்கு நடத்தப்படும் நிகழ்ச்சிகள் யாவும் முழுக்க முழுக்க ஆங்கிலமே. சிறிது பார்ப்பன உளறல்களும் மூன்று மணிநேர நிகழ்ச்சிகளில் ஓர் ஐந்து மணித்துளிகள்தாம் தமிழுக்கு ஒதுக்கப்படும். அதிலும் இந்திய ஒருமைப்பாட்டு ஓலம்தான். முதலில்தான் தமிழ் தெரியாப் பிறமாநிலத்தவர் முதன்மை அதிகாரிகள் பொறுப்பில் இருந்தனர். நடந்தது. இப்போது என்ன கொள்ளை வந்ததோ புலியைப் பார்த்துப்பூனைசூடு போட்டுக் கொண்டது போல் அல்லவா நடக்கிறது. ஒருவரைப் பார்த்து 'ஏனைய்யா' தமிழ்நாட்டில் உள்ள நிலையம். எல்லோரும் தமிழர்கள் தமிழில் நிகழ்ச்சிகள் நடத்தினால் என்ன' என்று கேட்டதற்கு ஆங்கிலத்தில் நடத்தினால் தான் மதிப்பு என்கிறார்கள். சிலர் தமிழ் எடுபடவில்லை என்கிறார்கள். இங்குள்ள அறிவியல் அறிஞர்களின் இல்லக் கிழத்திகள் உடுத்தும் உடைகள் திரைப்பட நடிகைகள் தோற்றார்கள் போங்கள்!

அவர்களைப் பார்த்து மூன்று நான்காம் பிரிவு ஊழியக் குடும்பங்கள் வருவாயைத் தாண்டிப் பொழுது போக்கிற்கு மட்டும் வருவாயைச் செலவு செய்து, பிள்ளைகளைக் கல்விக் குருடராக்கி விடுகின்றனர். நம் இழிந்த தமிழர் நிலை மேலே அப்படி; கீழே இப்படி!

—செய்தி தந்தவர்கள்: அறிவுடை நம்பி (சத்தியசீலன்) மெய். அருள்மொழியன்

ஆக்கிடு தமிழ்நிலத்தை

நீயொரு தமிழ் மகனா? —நீ
குடித்ததும் தமிழ்ப் பாலா —உனைப்
பெற்றதும் தமிழ் நாடா?

வறிதே வாழ்கின்றாய்—உன்
வாழ்வில் தாழ்கின்றாய்
சிறிதே செவிதருவாய் — நான்
செப்புவதைப் பெறுவாய்

காட்டு விலங்குகளும் —விடுதலை
கேட்டிடும் காலமடா!
கோட்டுக் குயில்கூட — உரிமைக்
குரல்தரும் வேளையடா!

நாட்டில் சிற்றினத்தோர் — தங்கள்
நாட்டைச் சமைக்கின்றார்;
ஏட்டைத் தந்தவனே — நீ
இனியும் உறங்குவதா?

எறிக்கொண் டேயன்னார் — நீ
இன்னமும் குனிகின்றாய்!
சீறியே பாய்ந்திடுவாய்—உன்
செந்தமிழ் பழிப்பவர் மேல்

ஊட்டிய தமிழ்ப்பாலில் — வீர
உணர்வு கலக்கிலையோ?
வேட்டுக் குழல்கூட — நீ
வெகுண்டால் தூள்தூளே!

மரம்போல் நிற்காதே — உன்
மண்ணினைச் சொந்த மென்பார்!
முறத்தால் புலிபுடைத்த — உன்
மூத்தவள் பெண்தானே!

தூக்கிடு வேட்டெஃகம் — நீ
துணிந்தால் பகை என்னும்
ஆக்கிடு தமிழ்நிலத்தை — அதில்
அமர்த்திடு தமிழ்த்தாயை!

— மெய். அருள்மொழியன்

மாசுக்கோ அயல்நாட்டு நூலகத்தில்

சேக்சுபியர் பற்றி 6,000 நூல்கள் உள்ளன!

மாசுக்கோவில் உள்ள அயல்நாட்டு இலக்கிய நூல் நிலையத்தில் சேக்சுபியர் பற்றிய பிரிவில்மட்டும் 6,000 பொத்தகங்கள் உள்ளன.

இந்த நூல் நிலையத்தின் 60-ஆவது ஆண்டுவிழா சென்ற ஆண்டில் கொண்டாடப்பெற்றது. இங்கு 136 மொழிகளில் பல இலக்கக் கணக்கான பொத்தகங்கள் உள்ளன. இதில் ஆண்டுதோறும் 40,000 புதிய பொத்தகங்களும், 3,500 இதழிகைகளும் சேர்க்கப்படுகின்றன.

இந்த நூல் நிலையத்தில் உள்ள சில பொத்தகங்கள், மிக மிக மதிப்பு வாய்ந்தவையாகும். இங்கு ஆண்டுதோறும் 1500 அரிய பொத்தகங்கள் செம்மைப்படுத்தப்படுகின்றன.

இங்கு பொதுவான படிப்பு அறைகளைத் தவிர, ஆராய்ச்சியாளர்களுக்கான தனிப் படிப்பு அறைகளும், இதழிகை மண்டபம், புதிய பொத்தக மண்டபம், காட்சி—கேள்வி (Audio-Visual) கருவி மண்டபம், அரிய நூல்கள் மண்டபம் முதலிய பிரிவுகளும் உள்ளன.

மற்ற நூல் நிலையங்களில் கிடைக்காத புதிய பொத்தகங்கள் இந்த நூல் நிலையத்தில் கிடைக்கின்றன.

இந்த நூல் நிலையத்தில் அனைத்துலக உறவுப் பிரிவும் உள்ளது.

91 நாடுகளில் உள்ள நூல் நிலையங்களுடன் இதற்குத் தொடர்புகளும், பொத்தகப் பரிமாற்ற உறவுகளும் உள்ளன.

எதிர்காலத் தமிழினம் பரிசுச் சீட்டுகள் விற்கும் பரம்பரையாக மாறிவருகிறது!

இனநலம் காக்க தன் நலம் மறந்த அணி பெருந் தலைவா! பாவலரேறு! ஐயா! வணக்கம்.

கீழ்க் காணும் கருத்தினைத் தங்கள் நினைவிற்குக் கொண்டு வர விழைகிறேன்.

தமிழினம் தன் பெருமைகளை மறந்து தான் தோன்றித் தனமான செயற்பாடுகளில் ஈடுபட்டு. இந்து முன்னணி ஆர். எசு. எசு. போன்ற அழிவியக்கங்களில், தற்காப்புப் பயிற்சி அளிக்கிறோம் என்று விருப்ப மொழி பகர்ந்து விடியல் விரும்பிகளை, வைகறைச் சேவல்களை மதவெறியூட்டி, பணம் அளிப்பு முறையில் மதம் வளர்த்து தன் இனத்தைத் தானே அழித்துக் கொள்ளும் அழிப்பு ஒருபுறம்; மறுபுறமோ, பரிசுச் சீட்டு

எந்த இளைய தலைமுறை எதிர்காலத்தில் இன்னலுறும சார உணவின்றி என்று கருதி சார உணவு உண்கிறதோ. அதே இளைய தலைமுறை தான் பரிசுச் சீட்டு விற்பனையில் ஈடுபட்டுள்ளது சிறுவன் ஒருவன் ஒரு நாளைக்கு பத்து உருபா வரை ஊதியம் கொண்டு வந்து விடுகிறான்

ஏழ்மை நிலையிலேயே அன்றிலிருந்து இன்று வரை வந்தாரை வாழ்விததும், வளாவித்துப வருகின்றவன் தமிழனே. அவன், தன் சிறிய பையன் நாளொன்றுக்கு உருபா பத்து மேனி ஊதிய மீட்ட முடியுமெனில் அதை மறுப்பானா? இங்கிலையில தான் முழுக்க முழுக்க சிறார்கள் பலர் கல்விச் சாலைகளை மறந்து, பரிசுச் சீட்டின் பாதாளம் நோக்கி பாய்ந்து கொண்டிருக்கின்றனர். இக்கால ஓரளவு தமிழர்கள (இளைஞர்கள்) கற்றிருந்தும், பார்ப்பன ஆளுமை அவர்களிடை வேரூன்றி வருகிறது; பின்போ, சிறார்கள் எல்லாம் பரிசுச் சீட்டின் விற்பனையில் இன்று வருவாய் பெறினும், வருங்காலத்தில், ஏழ்மையிலும் ஏழ்மையாய் நொடிந்து. பார்ப்பன அடிமைகளாய்ப் போவார்கள் என்பதில் ஐயமில்லை. எதிர்கால வாழ்விற்கு என்ன உறுதி! எந்த மரத்திற்குத் தாங்கள் நீரூற்றி வளர்த்து வருகிறீர்களோ அந்த மரத்தின கிளைகள் அறுபட்டு விழுந்து கொண்டிருப்பின் பயனென்ன? எந்த ஏழைகளுக்காகத் தாங்கள் அறிவுப் பணியாற்றி வருகிறீர்களோ அந்த ஏழைகளின் பிறங்கடைகள் தாம் பரிசுச் சீட்டு விற்பனையில் ஈடுபட்டுள்ளனர்.

யாரை இன மானமும் மொழிப் பற்றும் மிக்க புதுமைப் பிறப்புகளாய்க் காண விரும்பிகிறீர்களோ; அவர்கள் தாம இன்று, பரிசுச் சீட்டின் படுபாதாளத்தில் வீழ்ந்து

ஆப்கானிசுதானில் தேசிய இனங்களுக்குச் சம உரிமைகள்

தமது தேசிய இனப் பண்பாட்டை வளர்த்துக் கொள்வதற்கான அனைத்து உரிமையை ஆபகானிசுதானின் வரலாற்றிலேயே முதன் முறையாக அதன் எண்ணற்ற தேசிய இனங்களும் பழங்குடி மககளும் பெற்றுள்ளனர். அண்மையில் காபூலில் நடைபெற்ற பண்பாட்டு ஊழியர்கள கருத்தரங்கில பேசுகையில், ஆப்கன் அமைச்சரவைத் தலைவர் சுல்தான் அலி கேசுட்மாண்ட இவ்வாறு கூறினார். 1978 ஏப்பிரலல வெற்றியாக நடைபெற்ற புரட்சியினை வளைவாத இது கைகூடுவதாயிற்று. ஆபகானிசுதானிலுள்ள ஏறத்தாழ 30 தேசிய இனங்களுக்கும சம உரிமை உண்டு என்று ஏப்பிரல புரட்சி அறிவிததது.

ஆப்கானிசுதானில் இப்போது சிறுபான்மைத் தேசிய இனங்களின் மொழிவழிக் கல்வி நடைபெறுகிறது; அவர்களின் தாய்மொழியில பரநத அளவில் பாட நூலகள் விற்பனையாக்கப பெறுகின்றன; தாய் மொழியில் செய்தித் தாள்களும், புதினங்களும் அச்சிடப பெறுகின்றன. எழுத்தறிவு வகுப்புகளுக்குச் சென்று ஏறத்தாழ 10 இலக்கம் ஆபகானியர் எழுதப் படிக்கக் கற்றுள்ளனர் பல்வேறு தேசிய இனத்தனர் தததம தாய் மொழியில் கல்வி கற்கின்றனர் என்பதும், நடமாடும் வகுப்புகள் மூலம் நாடோடி மககளுக்கும கல்வி கற்பிக்கப்படுகிறது என்பதும குறிப்பிடத்தக்கது. காபூல பலகலைக் கழகத்தின சிறபபுத் துறைகளில், தேசிய இனச சிறுபானமையினரின் பண்பாட்டு மரபுகளும் சிற்றூாபபுற இலக்கியங்களும கறகப்படுகின்றன.

"அண்ணா!"

"என்ன தம்பி?"

"இராமகிருட்டிணரின் சிறு கதை ஒன்று......"

"சொல் தம்பி!"

இரண்டு மீனவப் பெண்கள் மீன் விற்க நகரத்திற்குச் செல்கிறார்கள். விற்று விட்டு மாலையில் திரும்பும் போது மழை வருகிறது. அவர்கள் ஒரு வீட்டில் ஒதுங்குகிறார்கள். மழை விடாமல பெய்யவே அங்கேயே அவர்கள் படுத்துக் கொள்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு உறக்கம வரவில்லை"

"புதிய இடம் என்பதனாலா?"

"இல்லை அந்த வீடு பூக்கடைக்காரருடையது. அந்த வீட்டில கமழும் பூக்களின் மணம அவர்களுக்குப் பிடிககவில்லை. எனவே தூக்கம் வரவில்லை".

"பிறகு என்ன செய்கிறார்கள்?"

"கருவாடு நாற்றம் அடிக்கும் தங்கள் கூடைகளை முகத்தருகே வைத்துக்கொண்டு தூங்குகிறார்கள்".

"நல்ல கதை தான்!"

"பூக்களின் நறுமணம் பிடிக்காமல் கருவாடு நாற்றத்தையே விரும்பிய அந்த மீனவப் பெண்களுக்கும், 'தமிழில் வழிபாடு (அருச்சனை) செய்யக் கூடாது; வட மொழியிலேயே அது இருக்க வேண்டும்" என்று கூறும் சிலருக்கும் என்ன அண்ணா வேறுபாடு?"

"எனக்குத் தெரியாது தம்பி!"

- தமிழவேள்

தமிழ் வாயில் கல்வித் திட்டத்தில் நஞ்சு பாய்ச்சுகிறார்கள்!

—0—

அந்தமானில் நிலைமை!

இந்தக் கல்வி ஆண்டு தொடங்கியது முதலே கல்வித் துறை தமிழ்க் குழந்தைகள் மீது நஞ்சு பாய்ச்ச முனைந்துள்ளது தெளிவாகத் தெரிகிறது.

கொஞ்சம் கொஞ்சமாகத் தமிழை ஒழித்துக் கட்டக் கல்வித் துறையினரால் திட்டமிடப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்தின் தொடக்கமே இந்த ஆண்டுப் பாடத் திட்டத்தில் முறைகேடான மாற்றங்களைக் கொண்டுவர இவர்களைத் தூண்டி இருக்கிறது.

தமிழில் முதல் வகுப்புப் படிக்க வந்திருக்கும் குழந்தைகளுக்கு இதுவரை மூன்றும் வகுப்பில் கற்றுத்தந்த இந்தி, ஆங்கில நூல்களை அறிமுகம் செய்திருக்கிறார்கள். இந்த நூலகளல் ஆங்கிலம் - இந்தி மொழிகளுக்குரிய உயிர், மெய் உயிர்மெய் எழுத்துகளின் அறிமுகமே கிடையாதென்பது குறிப்பிடத்தககது.

சில பள்ளிகளில கணக்குப் பாடங்களைத் தமிழில பயிலும் குழந்தைகளுக்கு ஆங்கிலத்தில் தந்திருக்கிறார்கள். சுருக்கமாகக் கூறினால், தமிழ்ப் பள்ளிகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு மாதிரியான பாடத் திட்டம அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. ஒரே வகுப்பில் வழங்கப்பட்ட இலவய பாட நூல்களுக்கும், காசு கொடுத்து வாங்கிய பாட நூல்களுக்கும் வேறுபாடு இருக்கிறது.

தமிழே தெரியாத தலைமை ஆசிரியர்கள் தமிழ்ப் பள்ளியில் அமர்த்தப்பட்டுத், தமிழ் வாயில கல்வியைச் சிறிது சிறிதாகச் சிதைக்கத் தூண்டப்படுகிறார்கள்.

23-8-82-இல் அபர்டீன் பள்ளியில நடந்த பெற்றோர்—ஆசிரியர் கழகக் கூட்டத்தில் (PTA) குருவித் தலையில் பனங்காயை வைக்கும் குழப்பமான பாடத் திட்டம் பற்றுப் பெற்றோரால் கண்டனம் தெரிவிக்கப் பட்டபோது அங்கு வந்திருந்த துணைக் கல்வி அதிகாரி பாடத் திட்டம் சற்று கடுமையானதுதான என ஒப்புக் கொண்டதோடு, இந்தி இனி விருப்பப் பாடமாக மட்டுமே கற்றுத் தரப்படும் எனறும் முரண்பாடு நிறைந்த பாடங்களை முறைப்படுத்த உரிய நடவடிக்கைகள் மேற்கொள்வதாக உறுதி கூறினார்.

தீவின் கல்வித் துறைக்குத் திட்டவட்டமான கொள்கை இருக்கிறதா? எந்த வகுப்பில் எது மாதிரியான பாடங்கள் கற்பிக்க வேண்டுமென, இல்லை; ஒவ்வோர் ஆண்டும் ஒவ்வொரு பள்ளியிலும் விரும்பியவாறெல்லாம் பாடம நடத்தப்படுகிறதா?

பெற்றோருக்கு ஓர் உறுதி மொழி தருகிறார்கள் அதிகாரிகள். மாறாக அதிகாரிகளுக்குத் தனி ஆணை தருகின்றனர் பாடத்திட்டம் குறித்து. கோத்தாரி குழு தாய் மொழிக் கல்வி பற்றியும், எளிமையான குழப்பமில்லாத பாடத் திட்டம் குறித்தும் வலியுறுத்தியதை இவர்கள் மறந்துவிடக் கூடாது.

தமிழர்கள் ஏதோ இந்தியை எதிர்ப்பவர்கள் போல ஒரு தோற்றத்தை உருவாக்கித் திசை திருப்ப முனைகின்ற அந்தமான் கல்வி அதிகாரிகள், அறியாமையில் ஏதோ செய்கின்றனர் என்று நகைப்பதா? இல்லை, உள் நோக்குடன் ஆழம் பார்க்கிறார்கள் என்று வருந்துவதா - தெரியவில்லை.

மும்மொழித் திட்ட முறையில தமிழ்க்கல்வி வாயில் மொழியாகவும் ஆங்கிலம் இந்திமொழிகளை இரண்டாம் மூன்றும் மொழியாகவும் மூன்றும் வகுப்பிலிருந்து மட்டும் கற்றுத் தந்து வழக்கம் போல் பாடத் திட்டத்தை நடத்த வேண்டும் என்பது தான் அந்தமான் தமிழரின் கோரிக்கை. கொள்கையென்பதைத் தெளிவாக விளக்கி, முறையாக ஆட்சியாளரும், கல்வித் துறையும் செயல்பட வேண்டும். அத்துடன் ஏதோ அருள் செய்வதாக நினைக்கும் ஏனோ தானோ நிலையை மாற்றிக்கொள்ள வேண்டும்.

நன்றி : அந்தமான் முரசு

கொண்டிருக்கின்றனர் பெரும பெரும் நகரங்களில் இன்று பரிசுச் சீட்டு விற்பனை சிறார்களாலேயே நடத்தப்படுகிறது; ஒவ்வொரு முகவரும தோராயமாக 60 சிறார்களைப் பணிக்கமர்த்தியுள்ளனர்.

சார உணவிடும் இக்கத் தமிழ்நாடு அரசு கண்டும் காணாதது போலிருப்பது ஏன்? தமிழன் ஏதிலி என்பதால் தானா? உள்ளம் குமுற இதைத் தங்கட்கு ஆம், தங்களைப் போன்ற இனமானக் கொண்டல்களிடந் தானே இதையெல்லாம் சொல்ல முடியும். பார்ப்போரிடம எல்லாம இதைக் கூறி, அப்படிப்பட்ட சிறார்களின் பெற்றோர்களிடம விளக்கி சொல்லியும் வருகிறேன். மற்றையோரும் முடிந்த அளவு செய்யின், நம்மின வளர்ச்சிக்கு. (ஆம்! அந்த சிறார்கள் தாமே எதிர்காலத் தமிழர். அவன் தானே இனம்.) உதவுவோமாக. என்று முடிக்கிறேன்

— தாரை. சிதம்பரபாரதி.

தீவிரப் பொதுவுடைமையாளர்...

(முதல் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 12 ஆண்டுகளாகத் தொடர்ந்து சிறையில் பல கொடுமைகளுக்கும் ஆளாகி, மனநிலை திரிந்து இப்பொழுதும் சிறையில உள்ளார். இவர் ஒருமுறை கூட விடுப்பில் வரவில்லை.) கலியபெருமாளின் மூத்த மகன் வள்ளுவன் (இப்பொழுது அகவை 33) (இவர் 1971-ஆம் ஆண்டு சிறைப்பட்டார்,) இரண்டாவது மகன் நம்பியார் (1970 இல் சிறைப்பட்டார்), இவர்களுடன் இவர் உறவினர்கள் இருவர் இராசமாணிக்கம் (54), ஆறுமுகம் (49) ஆகியோர் 1970-இல் இருந்து சிறையில் உள்ளனர்.

பெண்ணாடத்தில் உள்ள அருணா சர்க்கரை ஆலைத் தொழிலாளர் தலைவராக இருந்தவர் புலவர் கலியபெருமாள். 'அரசியல் தொடர்புள்ளவரும், கலைஞர்க்கு மிக வேண்டியவருமாயிருந்த சட்டமன்ற உறுப்பினர் ஒருவரின் தலையீட்டால், தங்கள் மேல் பொய்யான கொலை வழக்கு போடப் பெற்றுத் தங்கள் குடும்பமே சிறை வைக்கப் பெற்றது' என்று கூறுகிறார் வள்ளுவன். 'அரசியலை விட்டு விலகுவதாக உறுதி தந்தால், வழக்கைத் தவிர்த்துக் கொள்வதாக, கலைஞர் கால அமைச்சர் ஒருவர் பேரம் பேசினாராம். அதுவன்றி, அவர் தொழிற் சங்கத்தின் தொடர்பிலிருந்தே விலகிக் கொள்ள வேண்டும் என்று ஓர் இலக்கம் உருபா பேரமும் நடந்ததாம். 'இரண்டையும் தவிர்த்து, புலவர். திரு. கலியபெருமாள், தம் தொழிலாளர் கொள்கையில் தீவிரமாக நின்றதால், குடும்பமே இவ்வாறு சிறையில் வாட வேண்டியிருக்கிறது' என்று வள்ளுவன் நம் செய்தியாளரிடம் கூறினார்.

'கலைஞர் ஆட்சிக் காலமான 1971-இல், தீவிர நடவடிக்கை ஒன்றும் அவ்வளவு பெரிதாக இருந்ததில்லையாம். இருப்பினும் கொலை வழக்கில் தாங்கள் ஈடுபடுத்தப்பட்டதும், தண்டனை பெற்றதும் அரசியல் காழ்ப்புணர்ச்சியினாலேயே' என்று வள்ளுவன் கூறினார்.

நம் செய்தியாளரிடம் அவர் மேலும் கூறுகையில் 'நெருக்கடி நிலைக்குப் பின் வந்த சனதா கட்சி ஆட்சியில் (1977), தீவிரப் பொதுவுடைமையாளர்கள் அல்லது வன்முறையாளர்கள் (நக்சலைட்டுகள்) என்ற பெயரில் சிறைப்படுத்தப்பட்டோர்களில், 5 ஆண்டுகளாகத் தொடர்ந்து சிறையிலிருந்தவர்களையெல்லாம் விடுதலை செய்து விடலாம்' என்று சனதா கட்சியரசு மாநில அரசுக்குப் பரிந்துரை செய்திருந்ததாம். அதையொட்டி வங்காள அரசு ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களையும், பீகார் அரசு 100க்கும் மேற்பட்டவர்களையும், ஆந்திரா அரசு 20க்கும் மேற்பட்டவர்களையும், கேரள அரசு 28க்கும் மேற்பட்டவர்களையும், இன்னும் பிற மாநிலங்களும் சிறைப்பட்டிருந்த ஏராளமான தீவிரப் பொதுவுடைமையாளர்களையும் விடுதலை செய்தனவாம். ஆனால், 'தமிழக அரசு ஏனோ தெரியவில்லை. அன்றுப் சரி, இன்றும் சரி, எங்களை விடுதலை செய்வது பற்றி எண்ணிப் பார்த்ததாகக் கூடத் தெரியவில்லை' என்று வள்ளுவன் கூறினார்.

வள்ளுவன் சிறந்த பொதுவுடைமை உணர்வுள்ளவர். மக்கள் நலம் கருதும் கொள்கையுடையவர். இவரும் இவர் தம்பி நம்பியாரும் கடந்த 12 ஆண்டுகளாகச் சிறையில் பல கொடுமைகளுக்கும் துன்புறுத்தலுக்கும் ஆளாகியவர்கள். வள்ளுவனைக் காவலர்களும் சிறையதிகாரிகளும் அடித்ததால் இரண்டு கைகளின் தோள் மூட்டு நழுவிச் சரிசெய்யப் பட்டுள்ளன. இன்றும் இரு கைகளிலும் வலியிருப்பதாகவும், அதற்குப் பண்டுவம் செய்து வருவதாகவும், மீண்டும் ஒருமுறை அறுவை செய்ய வேண்டியிருக்கும் என்று மருத்துவர்கள் கூறுவதாகவும் குறிப்பிட்டார். அவரின் வலது காலில் உள்ள மேல் பாதத்தில் இருக்கும் அரத்தக் குழாய், அடியினால் அறுபட்டு அறுவையால் சரிபட்ட போதிலும், இன்னும் அரத்தக் கசிவு உள்ளதாகவும் கூறினார். சிறையில் தந்த உணவுக் கோளாறினால், வயிற்றில் புண் (அல்சர்) ஏற்பட்டுத் தொல்லை தருவதாகவும், அதனால் தமக்குத் தொடர்ந்து மூல நோய் ஏற்பட்டு உள்ளதாகவும் சொன்னார்.

''தம் தந்தை, தம்பி, மற்ற உறவினர்கள் அனைவரும் சிறையிலேயே தொடர்ந்து இருப்பதால், வெளியில் உள்ள தம் தாயார், திருமணம் ஆன ஒரு தங்கை போக, திருமணம் செய்விக்க வேண்டிய இரு தங்கைகள் ஆகியோரைப் பராமரிக்க வேறு யாரும் இல்லை; அவர்கள் ஆதரவற்றவர்களாக — இருக்கிறார்கள்'' என்றும் வள்ளுவன் குறிப்பிட்டார்.

'கடந்த காலத்தில் சிறையாளிகளை விடுதலை செய்யும் வகையில் எவ்வளவோ தாறுமாறான நடைமுறைகள் கையாளப் பெற்று உள்ளன. திரைப்பட இயக்குநர் ஒருவரின் மகன் கொலைத் தண்டனைக்குள்ளாகி, அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்தவுடன் 6 ஆண்டுக் காலத்திலேயே விடுவிக்கப்பட்டது வியப்பாக இருந்தது. அரசு மனம் வைத்தால் எதுவும் செய்ய முடிகின்ற நிலை உள்ளது' என்று நம் செய்தியாளரிடம் அவர் எடுத்துக் கூறினார்,

கடந்த 12 ஆண்டுகளில், கடலூர், திருச்சி, வேலூர், பாளையங்கோட்டை, சென்னை, கோவை, சேலம் ஆகிய அனைத்துச் சிறைகளிலும் தாம் இருந்திருப்பதாகக் கூறிய அவர், மதுரைச் சிறையில் இருந்ததில்லை என்றும், சென்னை, சேலம், வேலூர் போன்ற சிறைகளில் இரண்டிரண்டு முறைகள் இருந்ததாகவும் கூறினார்.

வள்ளுவன் தீவிரப் பொதுவுடைமையாளராகவும், கொள்கை வலிவுள்ளவராகவும், ஒரு பொது நலப் போராட்டக்காரராகவும், புரட்சியாளராகவும் இருந்தும், அவரையும் விரும்பிக் காதலித்து வந்துள்ளார் அகிலா என்னும் கடலூரைச் சேர்ந்த ஒரு பெண். கடலூரில் அவர் 1970-71இல் அகிலாவின் வீட்டில்தான் ஓராண்டு தலைமறைவாயிருந்திருக்கிறார். அப்பொழுது அகிலா பள்ளியிறுதி வகுப்புப் படித்துக் கொண்டிருந்த 16 அகவைப் பெண். வள்ளுவனின் தீவிரக் கொள்கையும் அவரின் உண்மையான தொண்டுணர்வும் அவரைக் கவர்ந்திருக்க வேண்டும். அன்றிலிருந்து அவரையே விரும்பி இதுவரை அவருக்காகவே காத்திருந்து, இவர் இக்கால் விடுமுறையில் வந்திருந்த பொழுது, கடந்த 22-9-82இல் தான் தவிர்க்கவியலாத சில சூழ்நிலையில் நண்பர்களுக்கிடையில் ஒப்பந்த உறுதிமொழி முறையில் திருமணம் செய்து கொண்டிருக்கிறார். இவர்களின் திருமண வரவேற்பு கடந்த 13—1—83 அன்று பாவலரேறு பெருஞ்சித்திரனார் தலைமையில், திருவல்லிக்கேணி, பெரிய தெருவில் நடந்தது.

நோயாளியாகவும், தொடர்ந்து சிறையில் உள்ளவராகவும் இருந்தும், அவரை விரும்பிக் காதலித்துத் தொடர்ந்து 12 ஆண்டுகள் காத்திருந்து, இன்னும் அமைதியான வாழ்க்கை எப்பொழுது அமையுமோ என்று தெரியாத நிலையிலும், அவரைத் திருமணம் செய்து கொண்ட அகிலா சிறந்த புரட்சிப் பெண்ணும் கடமையுணர்வு கொண்டவரும் ஆவார், என்பதில் ஐயமில்லை.

அரசு விரும்பி வரவேற்காத கொள்கைப் போராட்டங்களில் ஈடுபடுபவர்களை, அரசு தான் எழுதி வைத்துக் கொண்டிருக்கும் சட்ட முறையில் தண்டிக்க வேண்டியதுதான்! அதற்காகத் தனிப்பட்ட காழ்ப்புணர்வாலும், பழிவாங்கும் உணர்வாலும், மக்கள் நலம் நாடும் கொள்கைப் போராட்டக்காரர்களுக்கு இவ்வாறு தொல்லை தர எண்ணுவதும், கொடுமை செய்வதும், நாட்டின் மறுமலர்ச்சிக்கே கேடு தருவதாகும். இப்பொழுதுள்ள அ. தி. மு. க. அரசாவது, கலைஞர் காலத்தில், தெரிந்தோ, தெரியாமலோ நடந்துவிட்ட இக்கொடுமைக்கு ஆளாகி நிற்கும் புலவர் கலியபெருமாள், வள்ளுவன் குடும்பத்தை விரைவில் விடுதலை செய்து, ஒரு நல்ல நடைமுறைக்கு வழிவகுக்க வேண்டும் என்று நாம் விரும்புகிறோம்; கேட்டுக் கொள்கிறோம். தாறுமாறான சட்ட நடைமுறைகளால், எத்தனைக் கொள்கைப் போராட்ட நல்லெண்ணக்காரர்கள், புலவர் கலியபெருமாள், வள்ளுவன் போல், வலிவான சிறைச் சுவர்களுக்குள் அடைந்து கிடக்கின்றார்களோ, தெரியவில்லை. அறிவியல் கூறுகளும், பொதுமாந்தச் சிறப்பியல்களும் வளர்ந்து வரும் இக்காலத்தில், மக்கள் நலங் கருதிக் கொள்கை வழிச் சிந்திப்பவர்களை அடக்கி ஒடுக்குவது அவ்வளவு நாகரிகமும் பண்பாடும் ஆகாது என்பதே நமது கருத்து.

—நம் சிறப்புச் செய்தியாளர்

வெல்க தமிழ்நிலம் !

(பாவலர். தமிழ்க்குமரன், ஈரோடு.)

1. இழந்த உரிமையை எழுந்து பேணவும்
இழிந்த தமிழினம் ஏற்றம் காணவும்
முழக்கும் விடுதலை முகிழ்த்த தமிழ்நிலம் !
மொய்ம்பைப் காட்டியே முடித்துப் பகையினை
சழக்கர் வகுத்ததாம் சாதி மதங்களைத்
தள்ளி பொதுக்கியே தமிழர் ஒன்றென
உழங்கும் இன்பமாம் வாழ்வு நலங்களை !
வாழ்க தமிழ்நிலம் வாழ்க வாழ்கவே !

2. மொழியின் தூய்மையை முனைந்து காத்திவண்
முத்தமிழ்க்கலை முறையாய் வளர்த்திடும் !
அழிவில் வாததாம் அறிவி யற்பயன்
அமைவாய் விளைத்துல காண்டு சிறந்தது.
பொழிந்து வளங்களைப் போற்றி உரிமையைப்
புதுமை படைத்திவண் பொதுமை நாட்டிடும்
விழியாய் நமக்கெல்லாம் ஒளியை நல்கியே
வெல்க தமிழ்நிலம் ! வெல்க !! வெல்கவே !!

3. எத்தும் கள்ளரை இழந்த கயவராம்
எட்டப் பர்களை வீடணர்களை
மொத்தி விரட்டிடும் மொய்ம்பைக் காட்டியே,
மூத்த தமிழினம் முகிழ்த்துச் சிறந்திட
ஒத்த நற்கலை ஓம்பி வளர்த்தறம்
ஒழுக்கம் பேணியே உயர்ந்து சிறந்துநல்
வித்தை யூன்றியே விளைத்து நன்மைகள்
வெல்க தமிழ்நிலம் ! வெல்க !! வெல்கவே !!!

4. வாய்மை காத்திது வளர்ந்து பெருகியே
வளங்கள் கூட்டிநம் வறுமை நீக்கிடும் !
தூய்மை காத்திதன் தொண்டு சிறந்திடத்
துளிர்த்துத் தமிழினம் தூக்கும் புகழினை
ஆய்ந்து பார்த்துநம் அவலம் நீக்கிடும்
அரசு செலுத்தியே ஆண்மை வீறுடன்
வேய்ந்து மாப்புகழ் வீழ்த்திப் பகையினை
வெல்க தமிழ்நிலம் ! வெல்க !! வெல்கவே !!!

உ. த. மு. க.வின் உயர்ந்த கொள்கைகள் :

- தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்.
- சாதியற்ற, மதவேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்.
- இழிவுகளும் பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்.
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்.
- மனம், அறிவு, வாழ்க்கை -இவற்றை வளப்படுத்தவும் நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி.
- பழந்தமிழ் மரபுக்கும் மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்.
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல், அணுகுமுறை.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும். பதிவுஎண். TN/MS(C)\657

அனுப்புதல்:
'தமிழ் நிலம்'
5, அருணாசலத் தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை—5.

உறுப்பினர்.
ஆண்டு கட்டணம் ரூ. 36/-
அரையாண்டு கட்டணம் ரூ. 18/-

பெறுநர்.
நூல் அஞ்சல்
திரு / திருவாட்டி.

ஆசிரியரும், வெளியிடுபவரும் : பாவலரேறு பெருஞ்சித்திரனார். ! அச்சிடுவோர்
'தென்மொழி' அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.